# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 14 சுகந்தம் : 52 (தை - பங்குனி) - 2022




கலாபூஷணம்
மாசிலாமணி திருநாவுக்கரசு

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL



44/1, பழைய கல்முனை வீதி,

கல்லடி, மட்டக்களப்பு.

தொ.பே: 0776983597

பெக்ஸ்: 0652227542

E-Mail :kirupabatticaloa@yahoo.com

இணையம் : www.Thendralbook.com

**ஆசிரியர்/ வெளியீட்டாளர்**

**க.கிருபாகரன்**



**ஆசிரியர் குழு**

கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை

கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை

திருமதி.கவிதா கிருபாகரன்

கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்

செல்வி த. செல்வராணி

**ஓவியம்**

**சி.புரவர்த்தனி**

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர் ( ஆ-ர் )


## உள்ளே..


♦ **ஆசிரியர் கருத்து**

தைபிறந்தால் வழி பிறக்கும் ........................ 2

தென்றலின் தேடல் ............ 3

♦ **கவிதைகள்**

1. தைப்பிறப்பில் தைப் பொங்கல்..................... 8
2. இன்பம் பொங்க........... 14
3. உலகையாளும் உத்தமியே................. 22
4. சீர் செய்வார் யாரோ .... 23
5. யாருமில்லை என்ற கவலை வேண்டாம் .... 30
6. தொடுவானம் தூரமில்லை ............... 45

♦ **சிறுகதைகள்**

1. தவறுகளை உணர்ந்த போது!.......... 9
2. சீதையே வில் முறிப்பாள்! ................. 24
3. அப்பா! ....................... 31

♦ **கட்டுரை**

உடப்பு பிரதேசத்தில் அருகி நிற்கும் இலக்கிய வடிவங்கள்................... 15

♦ **புதிய வரவு**................. 46

♦ **நீத்தார் நினைவு**......... 47

♦ **வாசகர் நெஞ்சம்** ......... 48

# ""தைபிறந்தால் வழிபிறக்கும்""

**"தை பிறந்தால் வழி பிறக்கும்"-** எனும் முதுமொழிக்கமைய ஐம்பத்திரண்டாவது இதழில் **"தென்றல்"-** இந்த சுகந்தத்தை அடைவதற்கு **"தென்றல்"-** தாண்டி வந்த சவால்கள் ஒருபுறமிருக்க, அதன் முழுமூச்சான வெளிப்பாடுகளை தரவு போட்டுப் பார்க்க வாசகர்களாகிய உங்களை நாம் வேண்டுகின்றோம்.

எங்கள் சஞ்சிகை உங்களை வாசிக்கத் தூண்டியிருக்கும். எழுதவும் தூண்டியிருக்கும். அவ்வாறான உங்களுக்கு **"தென்றல்"-** தொடர்ந்தும் பணி செய்யக் காத்திருக்கின்றது. இலட்சியத்தோடு கூடிய உங்கள் இலக்கியப் பசிக்குத் **"தென்றல்"-** இன் ஒவ்வொரு சுகந்தமும் தயாராயிருக்கின்றது. ஆழமான சிந்தனைப் புலத்தைச் செயற்படுத்தி எழுதுங்கள். உங்களது எண்ணங்களை நீங்கள் எழுதி வைக்கும் போது அது ஆவணமாகின்றது. அடையாளமாகின்றது. தேடலுக்குத் தீனியாகின்றது. வரலாற்றுச் சான்றாகவும் ஆகிவிடுகின்றது.

புதிது புதிதான இளம் எழுத்தாளர்களின் வரவானது நமது செம்மொழியான தமிழ்மொழியை இன்னொரு சாதனைச் சிகரத்திற்கு இட்டுச் செல்லும். ஆதலால் வாசகர்களே! நீங்கள் ஒரு சிறந்த வாசகர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எழுத்தாளராக நீங்கள் இருந்தால் இன்னும் இன்னும் புதிய படையல்களைப் படைத்திடுங்கள். அது மட்டுமல்ல, உங்களது பணியை தொடர மானிட சமூகம் தயாராக அவர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்திடுங்கள்.

இது உங்களுக்கான தார்மீகப் பொறுப்பு. இதைத்தான் **"தென்றல்"-** எதிர்பார்க்கிறது.

தகையாது எழுதுவோருக்கு வாய்ப்புக்கள் தேடி வரும்.

**என்றென்றும் அன்புடன்**

**ஆசிரியர்**



# தென்றலின் தேடல்

## மாசிலாமணி திருநாவுக்கரசு

**-க.கிருபாகரன்-**

மட்டக்களப்பு மாநிலத்திலுள்ள கல்வியாலும், ஆன்மீக ஈடுபாட்டாலும், விருந்தோம்பல் பண்பாலும் உயர்ந்து நிற்கும் குருக்கள்மடம் கிராமத்தில் 1945.01.28 ஆம் திகதி மாசிலாமணித் தோம்புதோருக்கும்- சின்னப்பிள்ளைக்கும் மகனாக இவ்வையகத்தில் அவதரித்தார். இவர் எழுத்தாளராக, சமூக செயற்பாட்டாளராக, ஓய்வு பெற்ற கூட்டுறவுச் சங்க முகாமையாளராக, சமயத் துறையில் ஈடுபாடுடைய வராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது அதீத ஆற்றலை வெளிப்படுத்தி வரும் மாசிலாமணி திருநாவுக்கரசைத் **“தென்றலின் தேடல்”-** வாயிலாக வெளிக் கொணர்வதில் **“தென்றல்”-** பெருமையும், பேருவகையும் அடைகிறது.

### கல்வி

இவர் தனது ஆரம்பக்கல்வியினை மட்/பட்/குருக்கள்மடம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மட்/மட்/சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார். அதனைத் தொடர்ந்து தனது உயர்கல்வியை இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிலையத்திலும் மேற்கொண்டார். இப்பயிற்சியின் நிறைவில் வியாபார முகாமைத்துவம் தொடர்பிலான டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

### தொழில்

மண்முனை தென் எருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வங்கிச்சேவை முகாமையாளர், பொது முகாமையாளர், போப் நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் எனத் தனது ஈடுபாட்டால் பல்வேறு தரங்களிலான கூட்டுறவுத் தொழில் வாய்ப்பில் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

## வேறு பணிகள்

- செலிங்கோ நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்.
- வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பட்டிருப்பு நிருபர்.
- செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகையம்மன் ஆலய செயலாளர்.
- குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காமம் ஆலய செயலாளர்.

## கலை, இலக்கிய பாரம்பரியம் தொடர்பான அனுபவங்கள்

- மட்டக்களப்பு மாவட்ட பாரம்பரிய கலை, கலாசார மேம்பாட்டுக் கழகமான களரியின் பாரம்பரிய கலை பயிற்றுவிப்பாளராக பணியாற்றுகின்றமை.
- விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்துடன் இணைந்து சமகாலக் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுதல்.
- அறநெறி ஞாயிறு பாடசாலை ஊடாக மாணவர்களுக்கு சமய, கலை, கலாசார, விழுமியங்களைக் கற்றுக் கொடுத்தல்.
- நனவிலி நாட்டியப் பள்ளி நிருவாகத்தில் செயற்குழு உறுப்பினராக இருந்து மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு உதவுதல்.
- ஊடகத்துறையில் செய்தியாளராக இருந்து செய்திகள் மற்றும் இலக்கிய நிகழ்வுகளை அவ்வப் போது பிரசுரித்தமை.
- கண்ணகி கலை இலக்கியக் கூடலின் உறுப்பினராக இருந்து கலைப்பணியாற்றுகின்றமை.
- வசந்தன், கரகம், கோலாட்டம், கும்மி, நாட்டார் பாடல், வடமோடி- தென்மோடிக் கூத்துக்களின் பயிற்றுவிப்புக்கு உதவுதல்.
- மாவட்ட கூட்டுறவுச் சபையூடாக பொதுசனத் தொடர்பு மற்றும் இலக்கியப் பணிகளுக்கு உதவுதல்.

- நாடகங்களை எழுதி, நடித்துப், பயிற்றுவித்து வருதல்.
- மண்முனை தென் எருவில் பற்று மத்தியஸ்த சபை ஊடாக பிணக்குகளைத் தீர்த்தல்.

## பெற்ற விருதுகள்

- இலக்கியத் துறைக்கான கலாபூஷணம் விருது.
- பல்துறைக்கான வித்தகர் விருது.
- தமிழ்வளவன் விருது.
- பேரூரான் விருது.
- தேசகீர்த்தி விருது.
- கீர்த்திஸ்ரீ விருது.
- மனிதாபிமானத்துக்கான செயற்பாட்டாளன் விருது.
- சமாதானத்துக்கான தூதுவர் விருது.

## எழுதி வெளியிட்ட நூல்கள்

- **"மட்டக்களப்பின் மாண்புறு குருக்கள்மடம் எனும் பேரூர்"**- வரலாற்று நூல்.
- **"மட்/மாண்புறு குருக்கள்மடப் பேரூர் வித்தாளர் உலா மகுடம்"**
- **"திருத்தலம் கண்ட பாதங்கள்"**- (பொற்பாத தரிசனம்)

## தொகுத்து வெளியிட்ட நூல்கள்

- பொன்விழா சிறப்பு மலர்.
- முனைவு மலர்.
- கடம்பவனம் நினைவு மலர்.
- ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய கும்பாபிஷேக மலர்.
- **"ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய பதியாளும் எம்பெருமான்"**- திருப்புகழ்.

## ஆர்வமுள்ள துறைகள்

- கிராமியம் சார்ந்த கலை வடிவங்களை ஆக்க முயற்சியோடு பேணி, நடைமுறைப்படுத்தல்.
- ஆக்க நூல்களைப் பிரசுரித்தல்.
- வரலாற்று ஆவணங்களைச் சேகரித்தல்.
- அங்கம் வகித்த,வகிக்கும் அமைப்புக்கள்
- மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவை உறுப்பினர்.
- குருக்கள்மடம் முத்தமிழ் கலாமன்றத் தலைவர்.
- மட்டக்களப்பு மாவட்ட விவசாய மற்றும் பொறியியல் கூட்டுறவு சமாசத் தலைவர்.
- கொழும்பு மக்கள் வங்கி தலைமையக பொதுச்சபைப் பிரதிநிதி.
- மட்டக்களப்பு குருக்கள்மடம் பேராளர் அவை உறுப்பினர்.
- ஸ்ரீ ஐயனார் ஆலய பரிபாலன சபைச் செயலாளர்.
- மண்முனை தென் எருவில்பற்றுத் திருஞானசம்பந்தர் குருகுலப் பணிப்பாளர்.
- சங்காற்றுகை அவைத் தலைவர்.
- குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் கழகம் ஆகியவற்றின் ஆலோசகர்.
- சமய, சமூக இயக்கங்களின் செயலாற்று உறுப்பினர்.
- மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவாளர் அவை இணைப்பாளர்.
- மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மைய இணைப்பாளர்.

இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர். அந்தவகையில் ஈழத்து இலக்கிய-சஞ்சிகை-இசை-நாட்டிய-நாடக-கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **தென்றலின் தேடல்**-எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறாக கலை, இலக்கியம், ஊடகத்துறை, பொதுப்பணி எனப் பல்வேறு துறைகளிலும் அகலக் கால் பதித்து, 77 ஆவது அகவையில் கால் பதிக்கும் **"தென்றல்"**- இன் மகத்தான கலைஞரின் கலைப் பயணம் எதுவித தங்கு தடையுமின்றிப் பயணிக்க வேண்டுமென **"தென்றல்"** - மனம் திறந்து வாழ்த்துகிறது.

-கவிதை-

# தைப்பிறப்பில் தைப்பொங்கல்!

கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா

மாதங்கள் உருண்டோட- குளிர்
    மார்கழி விடை பெற்றுச் செல்ல
சீர்பெறு தைமகள் தரணியில்
    சிறப்புடன் வந்திட்டாள்!
ஏர் உழவும் உழவர்கள் வாழ்வில்- முன்
    ஏற்றம் கண்டு மகிழ்ந்திட
பார் போற்றும் தைமகள் வருகையை
    பால் பொங்கல் பொங்கி வரவேற்போம்!

உழவனவன் இல்லையென்றால்
    உணவுமிங்கு இல்லையடா..!
பழமை தொட்டு உணவளிக்கும்
    பாசம்மிக்க உழவன் நம் தெய்வமடா!
பாடுபட்டு உழைக்காமல்
    பாற்சோறு உண்போரெல்லாம்
கேடு கெட்ட மனிதரடா!
    கேவலம் இவர்கள் பூமிக்குப் பாரமடா!

தை பிறந்தால் வழி பிறக்கும்
    சகல பயிரும் விளைந்து நிற்கும்
கையிருப்பும் கூடி வரும்
    கவலையெல்லாம் பறந்தோடும்
மெய் வருந்தி உழைக்கும் உழவன்
    மேதினிக்கு உணவளிக்கும் முன்
உய்யவொளி மழை தந்துதவும்
    உதயசூரியனுக்கு தை முதல் நாளில் பொங்கிடுவான்!

-சிறுகதை-

# தவறுகளை உணர்ந்த போது...!

## -மருதூர் ஜமால்தீன்-

வானத்தில் சூரியக் கதிர்கள் சற்று வெப்பத்தைத் தவிர்த்து, அந்திமாலைக்கான வருகையை அறிவித்துக் கொண்டிருந்தது.

பறவையினங்கள் மரக்கிளைகளில் தாவிப் பறந்து, கீச்.. கீச்.. என்ற ஒலியுடன் தங்களின் ஓய்வின் மகிழ்வைத் தெரிவித்தது. மாலைப் பொழுதின் இளந்தென்றல் மெல்ல வீசி மனங்களைக் கொள்ளையிட ஆரம்பித்தது.

வீட்டு முற்றத்தில் அமைந்திருந்த கயிற்றூஞ்சலில் காலை நீட்டியவாறு நாகூரும்மா இலேசாக ஆடிக் கொண்டிருந்தாள். தனது வாசற்கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

**“என்னா நாகூரும்மா இன்னமும் பொறப்புடல்லியா நான் சொல்லிப் போட்டுல்லா போன. நீ என்னடாண்டா ஆறுதலா இருக்காய். ஓன்னக் கூட்டிட்டுப் போகத்தான் வாறன், பொறப்புடன் போவம்”**– என்றாள் பவுசியா ராத்தா.

**“என்ன யோசிக்கிறாய்?”**

**“எனக்கிண்டா சீனிம்மா ராத்தாட்ட போக மனம் வருதில்லகா மச்சி, சின்ன ஏச்சும், கதையுமா அவட வாயால கேட்டுட்டன். நீ போயிட்டு வாகா பொறகு பாப்பம்”.**– என்று தனது வீட்டுக்குப் பல வீடுகளுக்குத் தள்ளியிருக்கும் தனது உறவு முறையான பவுசியா ராத்தாவை அனுப்பி விட்டு, சில வாரங்களுக்கு முன் தனக்கு நடந்த நிகழ்வுகளுக்கு அவள் மனம் தாவியது.

கொறோனா தொற்றுக் காலம் நாட்டையும், ஊரையும் பாதித்திருக்கிறது. நாகூரும்மாவும் சில நாள் காய்ச்சல் வந்ததால்,

ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது, கொறோனா தொற்றியிருப்பதால் அவளைத் தனிமைப்படுத்தி, கணவனை வேறு ஊரிலும், பிள்ளைகளை வீட்டிலுமாக தனிமைப்படுத்தி விட்டனர்.

வீட்டுக்குள் முடங்கிய பிள்ளைகளுக்கு மிகவும் உணவுத் தட்டுப்பாடாக இருந்தது. கையில் பெரிதாகப் பணம் இல்லாவிட்டாலும், இருப்பதைக் கொண்டு பொருள் வேண்டி உணவு உண்ணுவதற்கும் வழியில்லாமல், அயலவர்களின் கடுகுப் பார்வைக்கு உள்ளாகி யிருந்தனர்.

ஒரு நாள் தனது மகள் மைமூனா வீதியில் வந்த மீன் வியாபாரியிடம் மீன் கேட்டபோது..,



**"அவங்களுக்கு மீன் குடுக்கவாணா. குடுத்தீங்கண்டா நாங்க ஓங்களுக்கிட்ட மீன் வேண்டமாட்டம்".**- என்ற அயலவள் சீனிம்மா ராத்தாவின் கடுந்தொனி மீன் வியாபாரிகளை மடக்கி விட்டது.

மரக்கறியாவது வேண்டுவோமென வீதியில் வந்த மரக்கறி வியாபாரியிடம் கேட்ட போது..,

**"ஓங்களுக்குக் கொறோனா மரக்கறி தரயேலா. வேறெங்கண்டாலும் வேண்டுங்க.."**- என்றான்.

வீட்டுக்கு எதிரிலிருந்த மரக்கறிக் கடைக்காரனிடம் கேட்ட போது, **"அங்க மரக்கறி குடுத்தா, ஓங்களுக்கிட்ட நாங்க வேண்ட வரமாட்டம்".**- என்ற அங்காடி வியாபாரிகளின் சில்லறைத் தனங்களால் கடைக் காரன் விரண்டு மறுத்தான். தமது அயலவர்கள் என்பதையும் உதறித் தள்ளினான். இதில் சீனிம்மா ராத்தா கடுமையாக இருந்தாள்.

மனம் அதிர்ச்சியால் உறைந்து போன நாகூரும்மா, உறவினர் களைப் போல் சகல இன்ப- துன்பங்களிலும் அன்பாகப் பழகி வந்த அயலவர்களின் உள்ளங்களில் மிருகம் எப்போது குடிகொண்டது என்ற கேள்விகயோடு அவமானங்களும் சூழ்ந்து கொண்ட நிலையில் விடை காண முடியாமல் தவித்தாள்.

**"ஒரு முஸ்லீம் தன்னைப் போன்ற இன்னொரு முஸ்லீமுக்கு ஏற்படும் நஷ்டத்தைக் கண்டால், அந்த இழப்பு தனக்கு ஏற்பட்டால், தடுத்திட என்னென்ன செய்வானோ அத்தனையும் செய்திட வேண்டும். சகோதர முஸ்லீம் துன்பங்களுக்கு ஆளாகி விட்டால், அந்தத் துன்பங்களை ஒவ்வொரு முஸ்லீமும் சம அளவில் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும். மாறாக சகோதர முஸ்லீம் ஒருவருக்கு ஏற்படும் துன்பங்களையும், துயரங்களையும், இழப்புக்களையும் கண்ட மாத்திரத்தில் உங்களுடைய உணர்வுகள் தூண்டப்படவில்லை யென்றால், உங்களிடம் கஞ்சத்தனமும், சுயநலமும் குடிகொண்டு விட்டது. உங்களுடைய ஈமான் உறுதியில்லை என்றே பொருளாகும்"**

பக்கத்திலிருந்த ஜும்ஆ குத்பாவில் நேற்று இமாம் கூறிய வார்த்தைகள் நாகூரும்மாவின் செவிகளில் இன்னும் ஒலித்தது.

என்ன அருமையாகச் சொன்னாரு ஹஸரத். இத இப்ப ஆருதான் கேட்டு நடக்காக, மனதிலேயே கேள்வி கேட்டு, விடைக்காக வானவெளியைப் பார்த்துக் கொண்டாள் நாகூரும்மா.

சீனிம்மா ராத்தாவைப் பார்க்கப் போவதா? இல்லையா? என்று மனமும் இருப்புக் கொள்ளாமல், தவித்த நிலையில் சில நாட்கள் கடந்தன.

**"உம்மா என்னயாம், அண்டய்க்கி பவுசியா ராத்தா சொல்லிட்டுப் போன.."- என்றாள் மகள் மைமூனா.**

**"சீனிம்மா ராத்தாவுக்குச் சொகமில்லையாம். கொறோனாவாம். அவவைத் தனிமைப்படுத்தி, இங்குறாகொடையில் இருந்து ஊட்ட வந்திட்டாவாம். போய்ப் பாத்திட்டு, வருவமெண்டு அண்டய்க்கி கூப்பிட்டா, நானும் பொறகு வாறனென்னு சொல்லிட்டன். அதான் யோசிக்கன்".-** என்றாள்.

**"நவக்கென போயிட்டு வாங்களம்மா"-** என்றாள் மைமூனா.

**"அவ எவ்வளவுதான் கதயக் கதச்சிப் போட்டா அல்ல, சல்லயும் நம்மள தீண்டத்தகாத ஆக்கள் மாதிரி பலரிட்டயும் சொல்லி அவமானப்படுத்தின ஒனக்குத் தெரியும்தானே".**

**"தெரியுந்தானும்மா நமக்கு தொற்று நோயெண்டு நம்மளக் கழிச்சுவெச்சா. ஆனா அல்லாஹ் நம்மளக் கொணமாக்கிட்டான். அவட குடும்பத்தில எல்லாருக்குமே கடுமையான நோயக் குடுத்து சோதிச்சிட் டான். அல்லாட நீதியப் பாருங்க..!**

**என்னென்டாலும் இந்தக் கொறோனா வாறத்துக்கு முந்தி அவ நமக்கு செஞ்ச ஒதவிகள் மறக்கேலாம்மா.. எவ்வளவு சந்தர்ப்பத்தில ஒதவி செஞ்சிருக்கா. மத்தவங்கட செல்லக் கேட்டு ஏனெரியா வீணாக் கதைச்சிட்டா, நமக்கு இப்ப ஒண்டும் கொறஞ்சி போறல்ல நமக்கு அல்லாரிக்கான்.**

**செரில்லாம்மா அல்ல சல்ல நமக்கு நாளய்க்கு ஒண்டுன்டா அவங்க ஓடியரணும். அவங்களுக்கெண்டா நாம ஓடிப் போகணும். இப்ப அவ குத்தத்த ஒணந்திருப்பா. அயலவங்கட குத்தங் கொறய**

**பொறுத்தமெண்டா அல்லாட ஒதவியிருக்கும்மா. ஒருதரம் போய் எட்டிப் பாத்திட்டு, வாங்களன்"**- மகள் மைமூனா ஒரு பிரசங்கமே செய்தாள்.

மாலை நேரத் தென்றல் மக்களைத் தழுவிக் கொண்டிருந்த நேரம். ஆகாயத்தில் பறவைகள் உணவு தேடிய களைப்பில் தமது இருப்பிடங்களை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. பகல் பொழுதை இருள் கவ்விக் கொள்ள ஆரம்பித்தது.

சீனிம்மா ராத்தாவின் வீட்டுக்குப் பலரும் சுகம் விசாரித்து வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சீனிம்மா ராத்தாவின் வாசல் கதவைத் திறந்து நாகூரும்மா உள்ளே நுழைகிறாள்.

**"அஸ்ஸலாமு அலைக்கும் ராத்தா", "அலைக்குமுஸ்ஸலாம்"**- எனக் கூறி முதுகைத் திருப்பி, நிமிர்ந்து பார்த்த சீனிம்மாவுக்கு ஆச்சரியம்.

**"வாபுள்ள நாகூரும்மா"**- எனக் கூறியவளின் கண்கள் நீர்த்துளிகளை வடிக்க ஆரம்பித்தது.

**"என்ன மன்னிச்சிரு புள்ள. நான் எவ்வளவெல்லாம் ஒனக்கு தைச்சுப் போட்டன். அல்லாஹ் எனக்கித் தந்திட்டான்"**- என்று கூறி அழுதாள்.

**"கொழறாதங்க ராத்தா அதெல்லாம் வாறதான்"**- என்ற நாகூரும்மாவின் கண்களும் பனித்தது. அங்கு தவறுகள் உணரப்பட்டு, இதயங்கள் இணைந்து கொண்டன.

**"தென்றல்" சஞ்சிகையில் இந்த ஆண்டுக்கான (2022) சந்தாப் பணமான ரூபாய் 900.00 தை காலதாமதமின்றி அனுப்பித் "தென்றல்"- இன் தொடர் வருகைக்கு உதவிடுங்கள்.**

**(ஆசிரியர்)**

-கவிதை-

# இன்பம் பொங்க..!!!

–அருட்பாவலர் நிலா தமிழின்தாசன், நிலாவெளி–

பச்சரிசி பால் பயறு பழவகைகள்
பதமான பொங்கலுக்குச் சக்கரையும்
இச்சையுடன் தான் சேர்த்து இனிய பொங்கல்
இதய மகிழ் வோடு படைத் தின்பம் காண்போம்!
பச்சை நிறப் பயிர் செழித்து உச்சம் காண
பலனளிக்கும் பகலவனை வாழ்த்தும் பொங்கல்!
முத்தமிழர் பரம்பரையின் நன்றிப் பண்பாம்
முற்காலத் தொடர் வழக்காம் தைப்பொங்கல் காண்!

தைபிறந்தால் வழிபிறக்கும் என்றே வாழ்வில்
தரணியிலே நம்பிக்கை கொண்டே வாழும்
செய்ய தமிழ் மாந்தரொடு வையந் தன்னில்
செழுமையுறப் பாடுபடும் மக்கட் கெல்லாம்
உய்யவழி அற்றநிலை "கொறோனாத்" துன்பம்
ஒவ்வொன்றாய் உருமாறிப் புரட்டுதையா!
மெய்யாக இது தொலைந்தால் உலகை விட்டு
மேன்மையுறும் சமூதாயம் உயர்ச்சி பொங்கும்!

எம்நாட்டில் பசளைக்குத் தட்டுப்பாடு
எவர்க்கும் பயிர் செழிக்கவில்லை மனதில் வாட்டம்!
மும்மாரி பொழிந்தாலும் பயிர்கள் ஓங்கி
முனைப்போடுதான் வளர்ந்து விளைவைக் காட்ட
செம்மையுடன் பசளையினைக் கொடுக்க வேண்டும்..
சிறப்பான நல்லாட்சி திகழ வேண்டும்
இம்மண்ணில் வறுமை அற்று இன்பம் பொங்க..
எல்லோரும் ஒன்றுபட்டு நல் ஆட்சி காண்போம்!!!

# உடப்பு பிரதேசத்தில்அரும்பி நிற்கும் இலக்கிய வடிவங்கள்!

**- உடப்பூர் வீரசொக்கன் -**

சீராார் வளமும், செல்வச் செருக்கும் சிறப்புற்றோங்கும் மண் உடப்பு. நீரும், நிலவளமும் மலிந்த பூமி. கண்ணூர் காட்சி அமைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இம்மண், கலைவளம் பீறிட்டுச் சிறந்தோங்கி நிற்பதுடன், இம்மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து நிற்கும் கலை, கலாசார இலக்கிய வடிவங்களுடன் நாட்டாரியல் பண்புக் கூறுகள், கடல்ப்பாட்டு என்னும் அப்பாப் பாட்டு என்பன இம்மண்ணின் சிறப்புக்கு – பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

சமய, சமூகப் பற்றுக் கொண்ட இவ்வூர் மக்கள் இருவேறுபட்ட காலச் சூழலினால் தென்னிந்தியாவிலுள்ள கிராமப் புறங்களிலிருந்து புலம் பெயர்ந்த மக்கள் குழுமமே.

இந்த மக்களின் கலாசார, சமய, பண்பாட்டு நெறிகள் தனித்துவமானவை. அதைப் போல இந்த மண்ணுக்குத் தனித்து வமான கூத்துக்கலை விரிவுபட்டு நிற்பதுடன், நாடக வளர்ச்சியும் கூட, புதிய பரிமாணம் கொண்டதாகக் காணப்படுகின்றது. மேலும் இங்கு கரகம், காவடி, கும்மிப் பாடல், கோலாட்டம், சித்திரச் செவ்வாய் போன்ற கலைப் பண்புகள் தமக்கே உரிய தென்னிந்தியத் தமிழ் வடிவில் அமைந்திருக்கின்றன.

இந்த நிகழ்வுகள் யாவும் இவ்வூரின் கிராமச் சூழலுக்கு ஏற்ற முறையில் சமயப் பற்றுடனும், தொழிலமைப்பு வடிவிலும் ஒன்றியே காணப்படுகின்றது. இவைகளுடன் இங்கு வெளியுலகம் காணாத இலக்கியப் படைப்புக்கள் கூட, இவ்வூர்ச் சிறப்பைச் சாற்றுவதாக இருக்கின்றன.

உடப்பு மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த சமயவழி என்பது இங்கு அமைந்துள்ள சக்தி ஆலய வழிபாட்டோடு, ஒன்றியே காணப்படுகின்றது. இந்த வழிபாட்டின் மையப் பொருளை அடிநாத மாகக் கொண்டே கலை மற்றும் இலக்கியச் சிருஸ்டிகளான கூத்து, கும்மி, அம்மானைப் பாடல், ஒப்பாரி, தாலாட்டு என்பன விளங்குகின்றன.

உடப்பு வாழ் தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத் தொழில் நெறியை தமக்கே ஏற்ற முறையில் வகுத்துக் கொண்டார்கள். தமது ஜீவனோபாயத் தொழிலான கடல் வளத் தொழிலை வரித்துக் கொண்ட மக்கள் குழுமத்தினரே இவர்கள். ஆயினும் இவர்களின் வாழ்வியல் பண்புகளின் தேவைகள் மற்றும் அடிப்படைக் குறைபாடுகள் இன்னமும் கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றன. இம்மக்களின் வாழ்க்கை முறைமைகள், சமயச் சடங்குகள், சம்பிரதாய இருப்புக்கள் என்பவை கூட, இன்னமும் வெளியுலகம் காணாத தன்மைகளைக் கொண்டதாகவே இருக்கின்றன. இக்குழுமத்தினர் இங்கே பிறந்து, இங்கே தமது வாழ்வை முடித்துக் கொள்ளுபவர்கள். இதனால் இம்மக்களின் கலை வடிவங்கள்- கலை ஊற்றுக்களின் செந்நெறிகள் தனித்தன்மை கொண்டதாகவே இருக்கின்றன.

இதனால் இம்மண்ணின் கலை வடிவங்கள் - ஆக்க இலக்கியப் படைப்புக்கள் வெளியுலகம் தெரியாத குடத்தின் விளக்காகவே இருந்து வருகின்றனவென்பது வெள்ளிடைமலை. அத்துடன் இவர்களின் தொடர்புகள் வடக்கு- கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உறவு முறைகள் அற்றதாகவும், பிரச்சார தொடர்புச் சாதனங்களில் நாட்டம் கொள்ளாமலும் காணப்படுகின்றது. இதற்கு உள்ளீடாக பாமரத் தன்மை இருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

இவர்களின் இலக்கியங்கள் வாய்மொழியான நாட்டார் பாடல்களாகவும், ஒப்பாரிப் பாடல்களாகவும் ஊற்றெடுத்துப் பாய்ந்திருக்கின்றன. இந்த மக்களின் இலக்கிய வடிவங்கள் யாவும் தெய்வாம்சம் நிறைந்ததாகவும், சமய வீரியங்கள் பெற்றதாகவும்

தமக்கேயுரிய சக்தி தெய்வங்களுக்குரிய தெய்வ வழிபாட்டுடன் காணப்பட்டன. அத்துடன் இவர்களின் வாழ்வுப் பண்புகள் நெய்தல் நிலச் சூழலுடன் பின்னிப் பிணைக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

இங்கு பிறந்த இலக்கிய கர்த்தாக்கள் வரகவிகளாகவும், இயற்கை ஆற்றல் கொண்ட கவிஞர்களாகவும், எழுந்தமான கவி பாடுபவர்களாகவும் செவிப்புலமை கொண்டவர்களாகவும் மற்றும் அறிவு ஜீவிகளாகவும் காணப்பட்டனர். இவர்களின் ஆக்கங்கள் யாவும் காவியங்களாக, தென்மாங்கு இசைப் பாடல்களாக காணப்பட்டன. பின்னர் அதனையொட்டிவந்தவர்களும் அதனைத் தழுவியும், பின்பற்றி யும் பாடி, இசையமைத்து வந்துள்ளார்கள். அத்துடன் திறமையும் ஆற்றலும் கொண்ட பல திறமைசாலிகள் மக்கள் முன்தோன்றி, தமது ஆற்றலை வெளிக் கொணர முடியாதவர்களாகவும் காணப்பட்டுள் ளார்கள். இவர்கள் திறமைகள் வெளிச்சம் காணாத திரிகள்.

உடப்புப் பிரதேசத்தில் ஆறு, ஏழு தசாப்தங்களுக்குப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆன்மீகத் தொடர்புச் சாதனங்கள் போன்றவை இங்கு தலைகாட்டினாலும் அவைகளுக்கு ஆக்கங்களை எழுதவோ, படைப் புக்களைத் திரட்டவோ முன்வராத கூட்டமாக இருந்துள்ளார்கள். திறமை இருந்தும் படைப்புக்கள் ஆவணப்படுத்தவில்லை.

அதன் பின்னர் புதிய தலைமுறை இளைஞர்கள் துடிப்புடன் இயங்கி, தமிழ்ச் சங்கம் மற்றும் சனசமூக நிலையங்களை துளிர்விடச் செய்தனர். இதில் படித்த கூட்டத்தினர் ஒன்றிணைந்தார்கள். ஏன் அவர்கள் கூட, நூல்களை, காவியங்களை ஆவணப்படுத்தவோ, பதிவுகளை மேற்கொள்ளவோ முடியாத கூட்டமாகவே காணப்பட்டனர். கூடிக் கலைந்தார்கள்.

இந்தியா - இலங்கைத் தொடர்புகள் காத்திரமான முறையில் அமைந்தபோது தென்னிந்தியக் கலைஞர்களின் வருகை ஆக்கிரமித்தன. அது ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. இது கலைஞர்களின் வளர்ச்சிக்கு உரம் சேர்த்தன. இலக்கியத்

தொடர்புகளைப் பெருக்க அடிநாதமாக அமைந்தன. தொடர்பு சாதனங்கள் பெருகக் காரணமாக இருந்தன.

இதன் பின்புலத்தைக் கொண்டு நாடகக் கர்த்தாக்கள், பாடகர்கள், பண்ணிசைப் புலவர்கள் மற்றும் இலக்கிய விற்பன்னர்களின் வருகை மறுமலர்ச்சியை ஏற்படுத்தின என்றே கூறலாம். இதன் அடியினைக் கொண்டு எமது ஊரும் உந்தப்பட்டது. இப்பின்னணியைக் கொண்டு, உடப்பில் நாடக கூத்து ராமாக்கள் தோற்றம் பெற்றன. பெரியமாமா-சின்னமாமா போன்ற கூத்துச் சபாக்கள் உருவாகி கூத்துக் கலையை முன்னிலைப்படுத்தின.

இக்கூத்துக்கள் உடப்பு திரௌபதையம்மன் ஆலய உற்சவங்களில் மேடையேற்றப்பட்டன. பல ஆற்றல், ஆர்வம் கொண்ட கலைஞர்கள் தோற்றம் பெற்றனர். இது கலைப் பயணத்துக்கு வித்திட்டது. ஒரு பரிமாணத்தை ஏற்படுத்தியது.

இவர்களின் கூத்துப் படைப்புக்கள் சொந்தமானதாகவோ, தழுவல்களாகவோ எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் இதன் தரவுகளையும், ஆவணங்களையும் இதுவரை பெற முடியாவிட்டாலும், அவர்கள் மேடையேற்றிய கூத்துக்கள் இன்றும் சமூக மட்டத்தில் பேசப்படுவதைக் காண்கின்றோம். இதில் **"காத்தவராயன் கூத்து"**, **"நளாயினி"**- போன்ற இசை வடிவ நாடகக் கூத்துக்கள் அண்மைக் காலத்தில் உடப்பில் மேடையேற்றப்பட்டுள்ளன. இதன் இசைத் தாக்கம் இன்னும் முணுமுணுப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

உடப்பில் பேசப்படும் சாகா இலக்கியச் செந்நெறிகள் காவடிச்சிந்து, தாலாட்டு, நாடகப் பாடல்கள், ஊஞ்சல், கும்மி என்பன. கலைஞர்களான கிழவையார் வீரபத்திரன், கதிரவேல் புலவர், சி.சொக்கலிங்கம் பூசகர் போன்றவர்கள் கவிதைகள், பாடல்கள் இயற்றியும் உள்ளனர். அதன் பின்னர் வந்த பெரிசோமாஸ்கந்தர், கிட்ணன் ஸ்ரீகந்தராஜா போன்றவர்கள் சினிமா மெட்டிலான பாடல்கள் இயற்றிப் பாடியுள் ளனர். இப்பாடல்கள் இன்னும் இச்சமூகத்தில் ஓங்கி ஒலிக்கின்றன.

1929 ஆம் ஆண்டு முதன் முதலாக உடப்பில் சி.சொக்கலிங்க பூசகரினால் **"உடப்பு ஸ்ரீ திரௌபதாமானியம்"-** வெளியிடப்பட்டது. இது உடப்பு நூல் வெளியீட்டுத் துறையில் மைல்கல்லாகும். அதன் பின்னர்தான் இளந்தலைமுறைப் படைப்பாளர்கள் தோன்றினார்கள். உணர்வு பூர்வமாக உத்வேகத்துடன் எழுந்து, படைப்பிலக்கியத் துறையில் கால்பதித்தார்கள். இதன் தாக்கம் பல வாலிபர்களை விழிப்படையச் செய்தது. அதன் பின்னர் இளைஞர் குழாம் ஒன்று கூடி, 1929 ஆம் ஆண்டில் தமிழ் அபிவிருத்திச் சங்கத்தினை உருவாக்கினர். அதன் மூலம் சமய, பொதுத் தொண்டு போன்ற இன்னோரன்ன ஆக்கப் பணிகளை மேற்கொண்டனர். தமிழ்க் கல்வியையும், சைவசமயத்தையும் வளர்க்க வாரங்கள் தோறும் கூட்டங்களை நடாத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தினர்.

இது மட்டுமன்றி, சிறந்த வாசிகசாலை அமைத்து வழிநடாத்தினர். இதில் அறிவுத் தாக்கத்துக்காக வேண்டி, இந்திய சஞ்சிகைகளான ஆனந்த விகடன், குமுதம், கலைமகள், மஞ்சரி, கற்கண்டு, கஸ்தூரி போன்ற இதழ்களைக் கொள்வனவு செய்து மக்களிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தினர். இதனால் ஒரு புதிய படித்த கூட்டம் வீறுகொண்டெழுந்து, புதிய புத்திஜீவிகள் தோன்றினார்கள்.

இவர்கள் துடிப்புள்ள இளைஞர்களாக இருந்தபடியால், பல இந்தியக் கலைஞர்களையும், சமயப் பெரியார்களையும் வரவேற்று கருத்தரங்குகளையும், இலக்கியக் கூட்டங்களையும் மேற்கொண்டனர். இருந்தும் எந்தப் படைப்பிலக்கியங்களையும் படைக்க முடியவில்லை. என்றாலும், இவர்களது துடிப்பான தொடர்புகளால் காசி கெங்காதர சுவாமிகள் 1955 ஆம் ஆண்டு குன்றக்குடி அடிகளாரின் **"உடப்பு தரிசனம்"-** அதன் பின்னணியில் பல இலக்கிய கர்த்தாக்களின் வருகையும் புதிய இரத்தத்தைப் பாய்ச்சியது.

இங்கு முற்போக்கு எண்ணம் கொண்ட பல படைப்பாளர்கள் தோன்றினார்கள். அவர்கள் பல கட்டுரைகளையும், கவிதைகளையும் மற்றும் சிறுகதைகளையும் படைத்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினர்.

குறிப்பாக இவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளை முன்வைத்து, தமது கிராமம் சார்பான கட்டுரைகளை வடித்தனர். இவர்களில் பெரிசோமாஸ்கந்தர், கே.ஸ்ரீஸ்கந்தராசா, எம்.சொக்கலிங்கசாமி, இரா.பாலகிருஷ்ணன் மு.சிவலோகநாதன், பி.தேவகௌரி, கோ. மகாதேவன், பெரி.ஜயமுத்து, சண்முகம் கோபால், பீ.நடராசா மற்றும் உடப்பூர் வீரசொக்கன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

அதன் பின்னர் உடப்பிலிருந்து பல தடம் பதித்த வெளியீடுகள் இலக்கிய உலகை அலங்கரித்தன. இக் கட்டுரை ஆசிரியர் மூலம் பல வெளியீடுகள் தலைகாட்டின. இந்த வகையில் **“அலைஓசை”** (றோணியோ பதிப்பு- 1987), **“உடப்பு திரௌபதையம்மன் (பார்த்தசாரதி) ஆலய வரலாறு”**- 1989, **“கங்கை நீர் வற்றவில்லை”**- (கவிதைத் தொகுதி -1990, **“அலைகடல் ஓரத்தில் தமிழ் மணம்”**- (1997) ,**”வீராவின் கதம்பமாலை”**- (2000), **“முண்டத்துண்டு”**- (சிறுகதைத் தொகுதி -2006), **“கீர்த்தி ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம் (2007)**, **“உப்புக் காத்து** (கவிதைத் தொகுதி -2008), **“நம்ம ஊரவங்க”**- (2009), **“முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வரலாறு அறிமுகம்”**- (2009) மற்றும் மு.சிவலோகநாதனை இதழாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட **“உடப்பூர்”**- (கட்டுரைத் தொகுதி) போன்றவை வெளிவந்த புதிய அறுவடைகளாகும்.

உடப்பு நாடக மேடைகளில் பல மன்றங்கள் தோற்றம் பெற்று, நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. இந்த நாடகங்கள் இக்கிராமத்துக்குரிய தொழிலாளர் பிரச்சினை, சமூக விழுக்காடுகள், காதல் இன்பரசங்கள் போன்ற கருப்பொருளைப் பின்னணியாகக் கொண்டு, நாடக இலக்கியத் துறைக்கு வளம் சேர்க்கின்றன. இதற்கு முன்னோடிக் கலைஞர்களான சி.கேசவமூர்த்தி, பெரிசோமாஸ்கந்தர், மு.சொக்கலிங்கசாமி, இ.பாலகிருஷ்ணன், தென்னப்பா செல்வமணி போன்றவர்களின் நாடகக் கதைப் படைப்புக்கள் முன்னுதாரணமாக இருந்தன.

உடப்பின் சிறுகதை இலக்கியத்துறை அண்மைக் காலங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது. அவ்வப் போது சிறுகதைகள் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. கே.ஸ்ரீஸ்கந்தராசா, ஆறுமுகசாமி, உமாதேவி, கே.மேகலா, எம்.அரிவீரன், வை.இராமச்சந்திரன், கே.மகாதேவன் போன்றவர்களின் சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. இவர்களின் சிறுகதைகளில் கடற்றொழில், வறுமை, மடமை, மது, அடிமைத்தனம், கொடுப்பனவு என்பவற்றை மையப் பொருளாக வைத்துக் கூடுதலான சிறுகதைகள் புனையப்பட்டுள்ளன.

ஆனால் இவைகளுக்கு மேலாக உடப்பூர் வீரசொக்கனின் **“முண்டத்துண்டு”**- சிறுகதைத் தொகுதி இப் பிரதேச மக்களின் பகைப் புலனை மையப்படுத்தி வெளிவந்த முதல் தொகுதியாகும். பலவாதப் பிரதி வாதங்களை முன்வைத்த சிறுகதைத் தொகுதி இது என்றே கூறலாம்.

உடப்புப் பிரதேசத்தில் நாவல் இலக்கியத்துறை என்பது பின்னடைவைக் கண்டுள்ளது. இக்குறை தீர்க்கப்பட வேண்டும்.

உடப்பின் இலக்கிய ஆக்கப் படைப்புக்கள் பிரக்ஞை பூர்வமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவைகள் வெளியுலகம் காணாத சங்கதி. எதிர்காலத்தில் இங்கிருந்து வெளிவரும் இலக்கியச் செந்நெறிகள் முனைப்பு பெற்றதாகவே இனம் காணப்படும் என்பது யதார்த்தமாகும்.

**அன்பான எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடகவியலாளர் களே உங்களிடமிருந்து தரமான கட் டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் தடை களைத் தாண்டிப் பயணிக்க உறுதுணையாக இருந்த நீங்கள் எமக்கு தரமான விடயதானங்களை அனுப்பித் “தென்றல்”-இன் தரம் பேண உதவிடுங்கள்.**

**(ஆசிரியர்)**

# உலகையாளும் உத்தமியே!!!

-கலைமாறன் செ.லோகராஜா-

வாசமலர்க் கொடியே எந்தன்
வசந்தத்தின் வரவே
நேசமுள்ள மலரே– என்
நெஞ்சத்தின் நினைவே!

பருவமலர்ச் செடியே எந்தன்
பாசமுள்ள பைங்கிளியே
உருக்கமான உறவே– என்
உண்மையான உலகே!

கார்மேகக் கூந்தலே எந்தன்
கற்பனையின் நாயகியே
ஊர் போற்றும் உத்தமியே
உலகையாளும் பத்தினியே!

கட்டிளமைக் கன்னிகையே– எந்தன்
கட்டுக்கடங்காத காவிரியே
பாட்டினில் பிறந்தவளே– என்
பண்பாட்டின் நாயகியே!

நீலக் கடலானவளே– எந்தன்
நெஞ்சினில் நிறைந்தவளே
கோல மயிலானவளே– என்
கோவிலின் குலவிளக்கே!

என்னில் தினம் இருப்பவளே– எந்தன்
இதயத்தில் கனம் இனித்தவளே
உன்னில் தினமும் இருப்பேனே
உயிரில் உயிராய் உறைவேனே!!!

# சீர் செய்வார் யாரோ!!!

-கவிதாயினி வாசுகி குணரத்தினம்,அமிர்தகழி-

நேர்மை இல்லை
நியாயம் இல்லை
கூர்மை கொண்ட
புத்தியிலே
குறுகிய சிந்தனைகள்
நாளும் வளர்ந்திடுதே!
ஐந்தறிவு ஜீவன்களின்
அறிவு நமக்கில்லை
தட்டிப் பறிப்பதுவும்
தந்திரம் பண்ணுவதும்
போலியாய் உறவு கொண்டு
புகழாரம் சூடுவதும்
நாளெல்லாம் நடக்குதிங்கே
நல்லோரை மருந்திற்கும்
நாம் காண முடியுதில்லை!
ஒருவனுக்கு ஒருத்தி என்ற
உறவு கெட்டுப் போனதிங்கே
தறுவாய்க்கு ஏற்றதொரு
தாரத்தை இணைத்துக் கொண்டு
தறிகெட்டு வாழுகின்ற
சமூகநிலை தொடருதிங்கே!
யார் செய்யப் போகின்றோம்
யார் இங்கே நீதி சொல்வார்
யார் இங்கே துணிவு கொண்டு
மாற்றங்கள் செய்திடுவார்
பாரினில் யாருமில்லை
பாவங்கள் புரிந்த பின்பு
பிராயச் சித்தம் தேடி
மரணம் நெருங்குகையில்
மனம் திருந்தி என்ன லாபம்..?

சிறுகதை

# சீதையே வில் முறிப்பாள்!

- ஜி.கிஷானி, மட்டக்களப்பு -

இந்த ஆடி போனால் அவளுக்கு 36 வயது ஆரம்பித்து விடும். அவளைக் கடந்து செல்லும் தென்றலும் அவளுக்குச் சுடுகின்றது. நிலவின் வெப்பம் கூட, அவளின் உடலை எரிக்கின்றது. தற்போது அசையாமல் ஜன்னலுக்குத் தானும் ஒரு கம்பியாகி விட்டாள்.

சிரிப்பு என்பது அவள் இதழ்களில் இல்லை. ஆனால், ஞாபகத்தில் இருக்கிறது. விடிவு என்பது வாழ்வில் இல்லை. வானத்தில் இருக்கின்றது. காமன் அவள் மீது தொடுத்த மலர்க் கணைகள் இப்போது விறகு எரிக்கும் கொள்ளியாகியது.

இராமன் ஒருவன் என் கரம் பிடிப்பான் என்ற கனவு மறைந்து இராவணனாவது வரமாட்டானா? என்ற நிலைக்கு வந்து விட்டாள். ஆண்டாள்தான் பாசுரம் படிக்க வேண்டும் என்று நினைத்த மனம், பட்டினத்தாரே பரவாயில்லை என்கின்றது. அவளுக்கு, விடிவு என்பது இருண்டு விட்டது. அவளுக்கான திருமணப் பேச்சு எடுக்கும் போது மட்டும் சொர்க்கத்துக்கு விடுமுறை போலும்.

**“கல்பனா..”**

என்ற குரல் அவள் சிந்தனைச் சங்கிலியை அறுத்தது. கல்பனாவின் தந்தை ரத்தினசிங்கம் நின்று கொண்டிருந்தார்.

**“நீ இன்னும் சாப்பிடல்லயாமா? வா போய்ச் சாப்பிடுவம்”**

**“எனக்குப் பசிக்கல்ல அப்பா, நா பிறகு சாப்பிடுறன்..”**

அவளின் தலையைக் கோதிவிட்டவாறே,

**“கவலைப்படாதம்மா எல்லாமே நல்லா நடக்கும். கைக்கு மீறிப் பணமும், கழுத்துக்கு மீறி நகையும் கேக்கிறாங்க. என்ன பண்றது..! இந்தச் சம்பந்தமாவது நல்லா வரட்டும்”**– என்று கூறிவிட்டு, மெது வாகப் படியில் கீழே இறங்கினார்.

எத்தனையோ பேர் அவளைப் பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். அதே பார்வைகள். ஒலிப்பதிவுப் பேச்சுக்கள். ஆனால், அவற்றுள் நெஞ்சில் அழியாத ஒரேயொரு நினைவு என்றால் அது முதன் முதலில் பெண் பார்ப்பு வீட்டில் அரங்கேறிய திருமண நாடகம்தான்.

குரல் மட்டும் விட்டு விட்டுக் கேட்கிறது. முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஏதோ ஒரு சுக அவஸ்தை. அப்போதுதான் என்னுடைய அறைக்குள் ஓடி வந்த சித்தியின் மகளைப் பார்த்து,

**“ஏய்.. மாப்பிள்ள எப்பிடி இருக்காருடி..?”**

**“நான் அவரப் பாக்கல்ல. ஆனா, அவங்க அப்பா செம்மயா இருக்காரு..”**

**“உன்ன பையனப் பாத்துட்டு வாடின்னா, அவரு அப்பாவ பாத்துட்டு வந்திருக்க..”**

**“அட ரொம்ப அவசரப்படாதமா.. மாப்பிள்ள சூப்பரா இல்ல. சுமாராத்தான் இருக்காரு! என்ன அக்கா ரொம்ப யோசிக்கிற..? உனக்குப் பிடிக்கல்லனா சொல்லு, நான் கட்டிக்கிறன்..”**

**“ஏய்.. முதல்ல படிச்சு முடி. அப்புறம் பார்ப்பம்..”**- என்று கல்பனா கூறி முடிப்பதற்குள்,

**“கல்பனா வந்து எல்லாத்துக்கும் காப்பியக் குடும்மா..”**- என்றபடி அம்மாவின் குரல் கேட்டதும், எனக்குக் குப்பென்று வியர்த்தது. ஒருவித பதட்டம், வெட்கம், மகிழ்ச்சி, பயம் எல்லாம் ஒருமித்து, அவளைத் தொற்றிக் கொண்டது.

ஒவ்வொருவருக்காய் காப்பி கொடுத்துக் கொண்டு, செல்லுகையில் இறுதியாக அவர்தான்! கைகள் உதறியது.. கண்களை உயர்த்தி நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு கணம் அந்த நான்கு கண்களும் சந்தித்துக் கொண்டன. சட்டென்று நிலம் பார்த்து தட்டை நீட்டினாள். அவனும் எடுத்துக் கொண்டான்.

பின்னர் மெல்லிய நடையில் ஓரமாய் சென்று நின்று கொண்டாள்.

டம்ளரில் வாய் வைத்து அவளைப் பருகினான். காப்பி சுட்டது. கண்கள் இனித்தது.

**"பொண்ணோட கொஞ்சம் பேசணும்.."**- சம்மதம் கிடைத்தது.

அறையில் அவர்கள் இருவர் மட்டும் தான். அறைக்கு வெளியே இருந்து மாப்பிள்ளையின் தந்தை உச்சஸ்தாயில் கத்தினார்.

**"ஏங்க.. நானெல்லாம் கல்யாண மேடையில தான் இவ முகத்தையே பார்த்தேன்.. காலம் எப்புடி மாறிட்டுது பாருங்க.."**

**"பரவால்ல.. இப்போ வேணும்னாலும் முகம் பாத்துட்டு கல்யாணம் பண்ணிக்கலாம்.."**- என்று நக்கலாகக் கூறினார்.

உடனே கல்பனாவின் தந்தை தன் பேச்சுத் திறமையைக் காட்டினார்.

**"அட நீங்க வேற! ஒண்ணக் கட்டி கர சேர்றதே பெரும்பாடா கிடக்கு.. இதுக்குள்ள ரெண்டு.."**- என்றார்.

இதைக் கேட்டதும் எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

அறைக்கு உள்ளே,

கல்பனாவின் இதயத் துடிப்பு அவளுக்கே கேட்கிறது. வெட்கத்தில் ஜன்னல் திரைச் சீலையை சுருட்டிக் கொண்டிருந்தாள். காற்றின் கைகலப்பைத் தவிர அங்கு பேரமைதி நிலவியது.

மாப்பிள்ளை, அஸ்வின் பேச ஆரம்பித்தான்.

**"எனக்கு உங்களப் பிடிச்சிருக்கு.. உங்களுக்கு..?"**

திரைச் சீலைக்குள் ஒளிந்தபடி,

**"ம்.."**- என்று தலை மட்டும் ஆட்டினாள்.

அவள் கஷ்டப்பட்டு உச்சரித்ததையும் காற்று தின்று விட்டது.

திருமணம் நிச்சயமானது. விடிந்தால் திருமணநாள்.

எல்லாம் ஒன்றாய்க் கிடைத்ததாய் ஒரு பிரமை அவளுக்கு.

கல்பனாவின் தோழிகள் அவளைச் சூழ அமர்ந்து கொண்டு அவளுக்கு மருதாணி வைத்துக் கொண்டிருந்தனர்.

இரவு முழுவதும் ஒரே சிரிப்புச் சத்தம். தோழிகள் கல்பனாவைச் சீண்டி விட்டு, வேடிக்கை பார்த்தார்கள். பின்னர் சிரித்துச் சிரித்துக் களைத்தே உறங்கிப் போனார்கள்.

மறுநாள் காலை அலங்காரங்கள் தொடங்கியது. தேவ கன்னியையே உலகுக்குக் கொண்டு வரும் முயற்சியில் கல்பனாவின் தோழிகள் முயன்று கொண்டிருந்தார்கள். திடீரென்று கல்பனாவின் தோழி ஓடி வந்தாள்.

**"அட கல்பனா வெளியில ஏதோ பிரச்சினப்பா..!"**

சிரித்துக் கொண்டிருந்த அத்தனை இதழ்களும் சட்டென்று இறுக, அறையிலிருந்து வெளியே ஓடினார்கள்.

**"என்னங்க பொண்ணுக்குச் சொந்தமா வீடு, குடும்பம் எண்டீங்க. ஆனா, இப்போ கட்டி முடியட்டும் தாரம் என்றீங்க. கேட்ட நகையில பாதிதான் போட்டு இருக்கீங்க..!"**- என்று அஸ்வினின் தாய் சத்தம் போட்டாள்.

**"கல்யாணம் முடியட்டும்மா. ஒண்ணுக்கு ரெண்டா பண்ணிடுறன். இப்போ கொஞ்சம் சிக்கலா இருக்கு.."**


**"அது எப்படி முடியும்! எங்க சொந்தக்காரங்க எங்களப்பத்தி என்ன நினைப்பாங்க? ஒரு பிச்சைக்காரக் குடும்பத்தோட சம்பந்தம் வச்சிருக்கிறதா நினைக்க மாட்டாங்க..!"**

**"சம்மந்தி வார்த்தயப் பார்த்துப் பேசுங்க.."**

**"என்னது நான் பார்த்துப் பேசணுமா? அஸ்வின் வாடா நம்ம போவம்.."**

**"ஐயோ கல்யாணத்துக்கு ஆக்கள் எல்லாம் வந்திட்டாங்க நில்லுங்கம்மா.."**

**"அப்பா போகட்டும் விடுங்க..!"**



அதுவரை மௌனம் காத்த கல்பனா வாய் திறந்தாள்.

**"என்னம்மா பேசுற? சம்மந்தி, அவ சின்னப் பொண்ணு. தெரியாமப் பேசிட்டா. மனசில வச்சுக்காதீங்க.."**

**"அப்பா நான் தெரிஞ்சுதான் பேசுறேன். இப்பேர்ப்பட்ட வீட்டுல போயிட்டு நான் நல்லா இருப்பன் எண்டு நீங்க நினைக்கிறீங்களா..?"**

**“சீதனம் குடுக்கத் துப்பில்லாத பிச்சக்காரக் கூட்டம்..”**- என்றாள் மாமியார்.

**“எந்த ஊர்லங்க பிச்சக்காரங்க குடுக்கிறாங்க? எங்க ஊர்ல வாங்கிறவங்கதான் பிச்சக்காரங்க! நீங்க என்ன போறது.. நான் சொல்றன் வெளியில போங்க..!”**

இந்தப் பேசா மடந்தைக்கு எங்கிருந்து இத்தனை துணிவு என்று அனைவரும் விறைத்துப் போனார்கள்.

**“வெளியில போங்க..”**- என்ற அவளின் அதிகார குரலைத் தவிர, அங்கு காற்றும் அசையவில்லை.

இன்றும் கூட, அந்தச் சம்பவம் மனதில் அவளுக்கு உலை மூட்டிக் கொண்டிருக்கிறது.

**“எத்தனை வருஷம் கடந்து போயிடுச்சி. அதே வரதட்சண இன்னிக்கு வரைக்கும் என்னோட வாழ்க்கையில தொடர்ந்து கிட்டே இருக்குது. வயசில பாதிய வரதட்சணயும், மீதிய ஜாதகமும் தின்னுருச்சி.. எப்பதான் என்னோட வாழ்க்கையிலயும் சூரியன் மிளிர்வான் இல்ல.. இல்ல.. யாருமே என்னத் தேடி இனி வரப்போறதில்லை. வரதட்சணங்குற வில்ல முறிக்க எந்த ராமனுக்கும் துணிவில்ல”**.- என்று தனிமையில் தனக்குள்ளே புலம்பினாள்.

இறுதியாக,

**“சீதைகளே ஒன்று கூடுங்கள். உங்கள் மிதிலை மதிலை விட்டு, வெளியே வாருங்கள். இதுவரை பாத்திரம் துலக்கியது போதும்.. சாஸ்திரம் துலக்கி வைப்போம். இனி சீதையே வில் முறிப்பாள்..”**- என்று முடிவெடுத்தாள்.

எழுத்தாளர்களே, ஊடக நண்பர்களே **“தென்றலின் தேடல்”** பகுதிக்குத் தங்களைப் பற்றிய விபரங்களைப் புகைப்படத்துடன் அனுப்பி வையுங்கள்.

(ஆசிரியர்)

# யாருமில்லை என்ற கவலை வேண்டாம்!!!

- கவிஞர் அஸ்மின், பொத்துவில் -

யாருமில்லை என்ற
கவலை வேண்டாம்
உனக்காய் அழுவதற்கு
உன் கண்கள் இருக்கின்றன
துடைப்பதற்கு
உன் கைகள் இருக்கின்றன
இனி யாருமில்லை என்ற
கவலை வேண்டாம்!

உன் தலையினை நீயே வருடிக்கொடு!
உன் தோள்களை நீயே தட்டு!
உன் திறமைகளை நீயே பாராட்டு!
உன் தவறுகளை நீயே குழிதோண்டிப் புதை!
தோல்விகளைக் கண்டு அஞ்சாதே!
வெற்றிகளில் மயங்கிக் கிடக்காதே!
முதலில் உன்னை வென்று
பிறகு உலகை வெல்ல வா..!

உடலில் உயிரும்
உணர்வில் துணிவும்
இருக்கும் வரை போராடு!
உன் எதிரிகளின் மூக்குகளை
உன் நம்பிக்கைகளால் உடை!
நட அடுத்தவன்
கைகளைப் பிடித்து அல்ல!
உன் கால்களைக் கொண்டு..!!!

சிறுகதை

# அப்பா!

-கோவிலூர் செல்வராஜன், லண்டன்-

**வி**மலன் வேலை விட்டு வீடு வந்து சேர்ந்தான்.

சமையலறையிலே சங்கரப்பிள்ளை அண்ணன் சமைத்துக் கொண்டிருக்கும் நேரமது. எனவே சமையலறையை எட்டிப் பார்த்தான். ஊசாட்டத்தைக் காணோம்.

வழக்கத்திற்கு மாறாக அவனுடைய மனம் பதட்ட நிலையில் இருந்தது. காரணங்களிலே தொங்காத ஓர் ஊமைச் சோகம். உள்ளத்திலே ஊர்வதைப் போலவும், அதற்குச் சரணாகதியடையாத ஒருவித தீர்மானத்துடன், தன் அறைக்குள் சென்று, உடைமாற்றிக் கொண்டு ஹோலுக்கு வந்தான்.

அவனுடைய பெயருக்கு வந்த இரண்டு கடிதங்கள் கிடந்தன. வழக்கமாகக் கடிதங்கள் ஒன்று. **"டெலி போன் பில்"** மற்றையது **"பாங் ஸ்டேற்மன்ட்"**. அவற்றைப் பிரித்துக் கணக்கு விபரங்களையும் மனசிலே பதித்துக் கொண்டான்.

உடல்கூட அசதியாக இருந்தது. **"பணம் உழைக்கும் மெஷனாக வாழ்ந்தால் இப்படித்தான்"**- என்று மனம் சலித்துக் கொண்டது. இரண்டு வேலைகள். ஒன்று, காலை ஐந்து மணி தொடக்கம் மாலை மூன்று மணி வரை. ஒரு மணித்தியாலத்திற்குள் வீடு வந்து, மீண்டும் தயாராகி நாலு மணிக்குத் துவங்கும் வேலைக்கு ஓடுவான். அந்த வேலை இரவு பதினொரு மணிக்குத்தான் முடியும். **"உடம்பில தென்பிருக்கிற நேரம் உழைக்க வேணும்"**- என்கிற உற்சாகத்திலே வேலை செய்கின்றான். ஆனால் கடந்த இரண்டு தினங்களாக உடல் **"ஆத்தாது"** என்று கெஞ்சுவது போல் அவனுக்குத் தோன்றியது. இன்று **"சிக்லீவ்"** எடுத்துக் கொண்டு நேரத்துடன் வந்து விட்டான்.

**"அப்பாவுக்கு எப்படி இருக்கு.."** என்கிற ஏக்கமே இந்த அசதிகளுக்கும், பதட்டங்களுக்கும் காரணம் என்பதை அவன் உள்மனம் ஏற்றுக் கொண்டாலும், ஒன்றுமே நடக்காதது போலவே அவன் வாழ

விரும்பினான். **"அப்பாவின் அருளுக்கும், ஆண்மைக்கும் முன்னால், எமன் வருவதற்குச் சரியாக யோசிப்பான்"**- என்று அவன் தன் மனசிலே ஏற்றுக் கொண்ட கற்பிதம் குழந்தைத்தனமானது.

விமலன் எப்பொழுதும் **"அப்பாவின் குழந்தையாக"**- இருப்பதையே விரும்பினான். **"சோறுடைத்துச் சோழவளநாடு"**- என்று ஒரு காலத்திலே பேசினார்கள். ஆனால், அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தின் தென்சீமையை அறியாத காலத்திலேதான் அவ்வகையான ஒரு சொலவடையை ஏற்படுத்தியிருப்பார்கள். **"மீன்பாடும் தேனாடு"**- என்று அழைக்கப்படும் மட்டக்களப்புத் தமிழகத்தின் அனைத்து வளங் களின் திரட்சி திருக்கோவிலாக விளங்குவதினாலேதான், அந்தக் கிராமத்தைத் திருக்கோவில் என அழைப்பதாகச் சிறுவயசிலே விமலன் மிரட்சி கொண்டிருக்கிறான். அப்பா அவனுக்குத் திருக்கோவில் பற்றிய தலவரலாறு சொல்வதற்கு என்றுமே சலித்தது கிடையாது. சூரபத்மனை வதம் செய்த போது ஸ்ரீ முருகன் வீசிய வேல் வாகூரக் கல்லைப் பிளந்து, ஒரு வெள்ளை நாவல் மரத்தில் வந்து தங்கியது. அந்த இடத்தில் எழுந்தருளியிருப்பதுதான் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் என்று சொன்னார். ஆரம்பத்தில் இந்தக் கோவில் மேற்கு நோக்கியிருந்ததாகவும், திருச்செந்தூர் முருகன் ஆலயத்தைப் போன்று இதுவும் கிழக்கு நோக்கிய கோவிலாக இருப்பதுதான் சிறப்பானதாக இருக்கும் என்று குருக்களும், பக்தர்களும் பேசிக் கொண்டார்களாம்.

மறுநாள் அவர்கள் வந்து பார்த்தபோது, பக்தர்களின் பிரேரிப்பினை ஏற்றுக் கொண்டது போல, இப்பொழுதுள்ளது போல, வாயில் கிழக்கு நோக்கி மாறி, இருந்ததாக அப்பா சொன்ன கதையைக் கேட்டு, அஃது எப்படிச் சாத்தியமாயிற்று என்று பல இரவுகள் தூக்கத்தைக் கெடுத்து யோசித்திருக்கிறான். திரும்பிய கோவில் என்பதுதான் காலப்போக்கில் திருக்கோவில் என வழங்கலாயிற்று என்கிற அப்பா வின் விளக்கத்தினை அவனால் ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை.

கடலையே தீர்த்தக் கரையாகக் கொண்டு, திகழ்வதினால், ஈழத்துத் திருச்செந்தூர் என்கிற புகழ் முற்றிலும் நியாயானது என்பதை ஏற்றுக் கொண்டான். இந்தத்தல புராணப் பெருமைகளுக்கு அப்பாலான ஓர்

ஈடுபாடு அந்தப் பிறந்த மண் மீது விமலனுக்கு எப்பொழுதும் உண்டு. உதயசூரியன் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமியைக் கும்பிட்டு, எழும் காட்சி அவனைப் பரவசப்படுத்தும்.

கடற்கரையிலே அடர்ந்து கிடக்கும் இராவணன் மீசை மற்றும் அடம்பன் கொடி ஆகியன கடற்கரை யின் சுகத்தினை அனுபவிப்பதற்கு விமலனுக்கு என்றும் தடையாக இருந்ததில்லை. சின்ன வயசிலே கடற்கரையின் ஒவ்வொரு குறுணி மணலையும் அவன் அடியளந்திருக்கிறான்.

திருக்கோவிலின் கிழக்குப் பகுதி நெய்தல் அழகு சிந்த, மேற்குப் பகுதியில் காடு! அதன் காவல் கோபுரங்கள் போல சங்கமாங்கண்டி, உகந்தைமலை, மொட்டையாகல்மலை ஆகியன ரம்மியமாகத் தெரியும். அந்தக் காட்டுக்கு இப்ப ஏதோ புதுப்பெயர். ஆனால், அப்பா அதனைப் **"பூமுனைக்காடு"**- என்று சொல்வார். கடற்கரை சார்ந்த பகுதியிலே எத்தனை ஆயிரம் தென்னை மரங்கள்! அளகபாத்தினை உலர்த்தும் இளம் பெண்களின் கோலத்திலே, வங்கக் கடலின் சீதளத்தை அள்ளி வரும் தென்றலிலே சுகிக்கும் அழகே அழகு!

திருக்கோவிலுக்குச் சொந்தமான நன்செய் வயல்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்திலே பரந்து கிடக்கிறது. மண்ணின் மைந்தரின் உழைப்புக்கு அவை போதவில்லை. காடுகளை அழித்துச் சேனைகளாக்கினார்கள். அக்கினி நாளிலே நெருப்பு வைக்கும் நிகழ்ச்சியை விமலன் சிறுவயசில் ஆவலுடன் ரசிப்பான். சேனையாகத் திருந்தாத அந்தக் காட்டிலே நாட்டுக் கட்டைகள் குத்தப்பட்டு நிற்கும்.

அந்த நிலையில் அந்த நிலத்திலே சோளன் நன்றாக வளரும். பின்னர் கச்சானுக்கும், ஏனைய சேனைப் பயிர்களுக்கும் வாகான பூமியாக அவர்கள் உழைப்பு அதனை மாற்றி விடும். மண்ணின் மைந்தருடைய உழைப்புக்களின் ஓர்மை மிகுந்த ஓர் உன்னத உருவமாக எப்பொழுதும் விமலனுடைய அப்பா அவன் நெஞ்சிலே குடியிருக்கிறார். திருக்கோவில் வீடுகளிலுள்ள உணவுத் தட்டுக்களி லேதான் எத்தனை சுவையான உணவுகள் கொலுவிருக்கும்? கடலிலே கிடைக்கும் மச்சம், கோரைக் களப்பு வாவியிலே கிடைக்கும்

நண்டுக்கும், இறாலுக்கும் தனிச் சுவையுண்டு என்று இன்றும் விம லனின் நாக்குப் பொச்சடிக்கும்! பற்களின் ஊத்தை கழற்ற இறைச்சி தின்ன விரும்பிக் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற யாரும் இதுவரை வெறும் கையுடன் திரும்பியதில்லை. பாலும், தேனும் அவர்களுடைய உணவுத் தட்டுக்களிலே வழியும்.

யாரோ ஓர் எழுத்தாளன் தான் பிறந்த கிராமத்தை நினைவு கூர்நத பொழுது, **"சொர்க்கத்திலிருந்து விழுந்த ஒரு துளி"**- யாகப் பாராட்டி, அதிசயித்திருக்கிறார். இத்தகைய ஒரு கற்பிதத்திலே தான் பிறந்த ஊரின் வனப்பு எப்பொழுதும் விமலனின் நனவுகளிலே பவனி வரும் அதன் எழிலுக்கும், வளத்துக்கும் ஆண்மை சேர்க்க அவதரித்த ஒரு மாமனிதர் என்கிற வியப்புக் கலந்த பக்தி எப்பொழுதும் அவனுக்கு அவன் அப்பா மீது உண்டு.

அந்த அப்பா இப்பொழுது முடங்கிக் கிடக்கிறார் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. உண்மையை ஆசைகள் விழுங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிச்சயமற்ற நிலையிலே விமலனின் மனசு தழும்பியது. அப்பாவுக்கு ஐந்து பிள்ளைகள். மூன்று மகன்கள். இரண்டு மகள்கள். அவன் அநேகமாகச் சின்னம்மாவுடன் தங்கி விடுவான். சின்னம்மாவின் அன்பும், ஆதரவும், காருண்யமும் அவனுடைய பிஞ்சு மனசிலே ஆழமான பதிவுகளை விட்டிருந்தன. அந்தச் சின்னம்மாவின் செல்வாக்குக் காரணமாகவே தான் கலை-இலக்கியத் துறைகளிலே ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் வளர்த்துக் கொண்டதாக ஒருவகை நன்றியறிதல் உணர்ச்சியுடன் நினைவு கூருவான். மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டு பெயர் பிரபல்யமானவை, கலையையும், இலக்கிய அனுபவங்களை யும் வளர்த்தெடுக்கக் கூடிய விதத்திலே கொழும்பில் உத்தியோகம் கிடைத்த பொழுது, விமலன் மனங்கொள்ளாச் சந்தோசத்திலே மூழ்கினான். சின்னம்மாவின் கலாரீதியான செல்வாக்கினாலேதான் இது சாத்தியமாயிற்று என விமலன் நினைத்துக் கொள்ளுவான்.

1983 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை ஈழத்திலே வாழ்ந்த அத்தனை தமிழர்களுடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு வகையில் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. விமலனின் வாழ்க்கை

யிலும் அத்தகைய மாற்றம் ஏற்பட்டது. கொழும்பு உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டு, ஊர் வந்து சேர்ந்தான்.

அந்தக் காலத்திலேதான் அவனுக்குத் திருமணம் நடந்தேறியது. வீட்டார் பேசிச் செய்த திருமணம் தான். மனைவி படித்தவளாகவும், உத்தியோகம் பார்ப்பவளாகவும் இருந்தாள். குடும்ப வாழ்க்கையின் நிறைவுக்கும், மகிழ்ச்சிக்கும் சான்றாக, ஒரு பெண்ணும், ஆணுமாக இரண்டு குழந்தைகள் கிடைத்தார்கள். அப்பா எப்படித் தன் பிள்ளைகளை உருவாக்கி, ஆளாக்கி வைத்தாரோ அதேபோன்று தானும் தன் பிள்ளைகளை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்கின்ற ஆசை ஒரு வெறியாகவே மாறலாயிற்று.

நாட்டிலே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அவலத்திலே, விமலனின் தம்பி வெளிநாடு சென்று, அலைந்து திரிந்து, ஈற்றில் நோர்வே நாட்டிலே வாழத் தலைப்பட்டான். அவனுடைய உதவியாலும், அவன் எடுத்த சாதுர்யமான நடவடிக்கைகளாலும் விமலன் நோர்வே நாட்டிற்கு வந்து வாழத் தலைப்பட்டான்.

நாடு புதிது. அதற்குரிய பருவகாலங்கள் புதிது. அவர்கள் பேணிய விழுமியங்களும், நாகரீகங்களும் புதிது. இந்த நிலையிலே குடும்பத்தை அழைத்து, இந்நாட்டிலே ஒரு குடும்ப வாழ்க்கையை நிரந்தரமாக அமைத்துக் கொள்வதிலுள்ள சாதக, பாதகங்களை நீண்ட காலமாகச் சிந்தித்தான். ஈற்றில் தன் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் தமிழ்நாட்டுச் சூழலிலே வாழ ஏற்பாடு செய்தான்.

மூன்று கேந்திரங்களுக்கிடையில் அவனது மனசு ஊசலாடியது. அவனுடைய இளம் குடும்பம் தமிழ் நாட்டில்.அவனுடைய அப்பா-அம்மா வளர்த்து ஆளாக்கிய சின்னம்மா ஆகியோர் திருக்கோவிலில். ஆவன் மட்டும் ஒரு வகையில் பணம் உழைக்கும் எந்திரமாக நோர்வே நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அவன் அப்பா நோய்வாய்பட்டு, கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டார் என்கின்ற செய்தி கிடைத்தது.

**"அப்பாவுக்கு ஒப்பரேசன் ஒண்டு செய்யனுமாம் மனே"**- என்று அம்மா தொலைபேசியிலே சொன்ன பொழுது ஆடிப் போனான்.

அவன் அறிவறிந்த பருவத்திலிருந்து அப்பா ஒரு தடிமல், காய்ச்சல் என்று கூட, வைத்தியசாலைக்குச் சென்றதில்லை. அவருக்கு ஆப்பரேசன் செய்யக் கூடியதாக என்ன நோய்?


அடுத்த நாள் மீண்டுமொரு செய்தி தொலைபேசியிலே கிடைத்தது.

**"ஒப்பரேசன் செய்வதற்கு அப்பாவின் உடல் நிலை ஏற்றதாக இல்லை என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். எனவே, ஊருக்கே திரும்பிக் கொண்டு, போறம். இனி நாட்டு வைத்தியம் ஏதாவது செய்து பார்க்கலாம்".**

விஞ்ஞான ரீதியான மேலைநாட்டு வைத்திய முறையினால் குணப்படுத்த இயலாத வியாதியை, நாட்டு வைத்தியன் மாந்திரீயத்தின் மூலமா குணப்படுத்தப் போகின்றான்.

எந்த நேரமும் ஏதாவது செய்தி வரும் என்று மனம் பயந்தது.

அந்தச் செய்தியைத் தாங்க மிகுந்த பிரயாசைப்பட்டு, மனதைப்



பக்குவப்படுத்த வேண்டும் என்கிற நினைவே ஆக்கினை நிறைந்ததாக இருந்தது. இடைக்காலத்தில் இரண்டாவது வேலையை விட்டு விடலாமோ என்றும் விமலன் யோசித்தான்.

இரவில் தூங்க முடியவில்லை. இளமைக் காலத்திலே அப்பாவுடன் செலவு செய்த அந்த இனிய நிகழ்ச்சிகள் மனசிலே குமைந்து குமைந்து எழுந்தன. அவை கனவா? நனவா? என நிதானிக்கவும் முடிய வில்லை.

அப்பா தன்னுடைய மனசிலும், இரத்த ஓட்டத்திலும் இவ்வாறு பின்னிப் பிணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அவன் முன்னரெப்போதும் உணர்ந்ததும் இல்லை.

நண்பர்களும், வேலையிடத்தின் சகாக்களும் **"என்ன சுகமில்லையா?"**- என்று கேட்கவும், செய்தார்கள். ஏன் இப்படி எல்லாம்? மனம் குழம்பிப் போய்க் கிடந்தது. உடம்பிலே அவனாலே நிதானிக்க இயலாத ஒடுக்கமும்- உறக்கமும்!

வெளிக் கதவு திறக்கப்படுவது போன்ற சத்தம். **"யாரு? அண்ணனா?"**- என்று குரல் கொடுத்தான்.

**"ஓமோம்.. "**- என்று சொல்லிக் கொண்டே சங்கரப்பிள்ளை அண்ணன் நுழைந்து கொண்டிருந்தார். **"அது"**- முடிஞ்சு போச்சு. அதுதான் **"வீன்மொன போ**"- லுக்குப் போய் வாங்கி வந்த நான் என்று சொல்லி, **"தெரியாதே?"**- என்கிற குழு ஊக்குறிக்குள் சொல்ல விரும்பாத விசயங்களை மூடினார்.

சங்கரப்பிள்ளை அண்ணன் பாவம். வயசு ஐம்பதாகிறது. வீட்டைக் காப்பாற்றும் கடமையிலே, நோர்வேக்கு வந்து, இந்த வயசில் ஒண்டிக் கட்டையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருக்குக் கொழுவி யுள்ளதோ இரவு வேலை. கணகணப்புக்குக் கொஞ்சம் **"விஸ்கி"**- வயிற்றுக்குள் போட்டுக் கொண்டால் தான் இயக்கங்கள் நேர்சீராக இருக்கும் என்கிற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அவர் சாவகாசமாகத் தன்னுடைய அலுவல்களை முடிப்பதற்கு இடமளித்து, விமலன் ரீ.வி. ஸ்ராண்டின் கீழ்த் தட்டிலே இருந்த ஈழநாடுப் பத்திரிகையை எடுத்து மேயத் துவங்கினான். அந்தப் பத்திரி

கையை ஏற்கனவே நாலஞ்சு தடவைகள் விமலன் வாசித்து விட்டான். ஆனாலும்..

சங்கரப்பிள்ளை அண்ணன் தான் வாங்கி வந்த **"அப்பரென்"**- விஸ்கியை, அதற்குரிய சடங்கு முறைகளை மிகவும் பவ்வியமாக அனுசரித்து, ஒரு **"பெக்"**- குடித்து முடித்து, ஏதோ அவஸ்தையிலிருந்து விடுபடுபவரைப் போல செருமினார்.

அந்த ஈழ நாட்டின் தலைப்புச் செய்தி கொழும்பில் எண்ணெய்க் குதங்கள் தீப்பிடித்து எரிந்தன- எனப் பளிச்சிட்டது! அப்பாவைக் கொழும்புக்குக் கொண்டு வந்த அன்றோ அல்லது மறுநாளோ அது நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து கொழும்பில் நிலவிய பதட்ட நிலையினால் அப்பாவை ஊருக்குக் கொண்டு போக அவசரப்பட்டார்களோ? அல்லது நாட்டு வைத்தியமே சர்வ பரிகாரம் என்று முடிவெடுத் தார்களோ உண்மைத் தகவல்கள் மறுமுனையிலிருந்து கிடைப்பது அரிதாக இருப்பதாகவே விமலனுக்குத் தோன்றியது.

சட்டென்று அவன் மனசிலே அப்பாவுடன் சம்பந்தப்பட்ட இளவயசு நினைவுகள் ஊர்கோலம் வந்தன. அறுவடை காலத்திலே அடம் பிடித்து, அப்பாவுடன் வயற்காட்டுக்குப் போய் விடுவான். பள்ளிக்கூடம் இல்லாத நாட்கள் என்றால், நீர்ப்பாச்சும் காலங்களிலும், உரம் போடும் காலங்களிலும் விமலன் அப்பாவின் வயலுக்குச் செல்வான். அப்பாவின் வயலிலே வேலை செய்யும் அனைவருக்கும் விமலன் மகா செல்லம். விமலனை **"பள்ளியான்.. பள்ளியான்.."**- என்று செல்லமான பட்டப் பெயர் சூட்டி அழைப்பார்கள். **"நீங்க போய் நிழலில் இருங்க தம்பி"**- என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அப்பா, அப்படியல்ல. வயல் முழுதும் வரப்புகளில் எல்லாம் மகனை அழைத்துச் செல்வார். அவனு டைய குஞ்சுக் கால்கள் அந்த வயலிலே படுவதை அவர் விரும்பினார். அது ஏன் என்று விமலனுக்குப் புரிவதில்லை.

நெல் செய்கையை ஒரு தொழிலாக, பொருளீட்டும் உபாயமாக அப்பா நோக்கவில்லை- என்பதை விமலன் இலகுவாகப் புரிந்து கொண்டான். அதனை அவர் பக்தி பூர்வமாக மேற்கொண்டார். வளர்ந்த பின்னர் கிருஷகப் பகுதியினர் நெறிப்படுத்திய புதிய வழிமுறைகளையும், யுக்திகளையும் பிரயோகிக்க வேண்டும்- என்று விமலன் ஆர்வம்

காட்டினான். அவனுடைய ஆர்வங்களை அப்பா வேளாண்மைச் செய்கையிலே புகுத்துவதில் மகிழ்ந்தார். விளைச்சல் அமோகமான பொழுது, அப்பா வார்த்தை கண்டுபிடிக்கத் திணறி, மனசும், முகமும் மாபெரும் சிரிப்பாக மாறும். அந்தக் காட்சியை விமலன் என்றுமே மறந்ததில்லை.

யானைக்காவல், பன்றிக்காவல் என்று அப்பா சொல்வதுண்டு. அவற்றிற்கும் வரப் போவதாக விமலன் அடம்பிடிப்பான். கடைசியிலே விமலனின் பிடிவாதங்களுக்கு மசிந்து கொடுப்பதுதான் அப்பாவின் சுபாவமாக மாறியது.

காட்டோரம் பரண் அமைத்து, அதிலே படுக்கையும் அமைத்து, யானை வரும் வழியில் தீ மூட்டி, **"ஹாய்.. கூய்.."**- என்று காவல் காப்பதை விமலன் எப்பொழுதுமே வீரசாகசம் நிறைந்த விளையாட் டாக கற்பனை செய்து கொள்ளுவான். காவல் இருக்கும் பொழுது, பெரிய புரையிலிருந்து, **"தம்பி, மகன்.. கவனம்.."**- என்று அவர் சொல்லிக் கொண்டே இருப்பார். அவர் எப்பொழுதும் விமலனைக் குழந்தையாகவே தரிசிக்கிறார் என்பதை விமலன் நினைத்துச் சிரித்துக் கொள்ளுவான்.

காலையிலே விமலன் சற்றுக் கண்ணயர்ந்து போவதுண்டு. அவனை எழுப்பாது, காட்டுக்குள் சென்று கணபதியின் சேனையில் பிஞ்சு சோளக் கதிரும், அவித்த கச்சானும் எடுத்து வந்து சூடாகத் தேனீரும் தயாரித்த பிறகே விமலனை எழுப்புவார். அப்பாவின் கரிசனையிலே விமலன் பூரித்துப் போனாலும், காவலுக்கு வந்த இடத்தில் தூங்கி விட்டோமோ என்று விமலன் வெட்கப்படுவதும் உண்டு.

இந்த நினைவுகளிலிருந்து சற்றே விடுபடுவது போல, **"சரியண்ணே சமையல் ஒன்றும் செய்யலியா?"**- என்று விமலன் கேட்டான்.

**"இண்டைக்கு அடுப்பு மூட்டிச் சமையல் செய்ய வேண்டாம் எண்டு யோசிச்சன். 'பிச்சாவுக்கு'- ஓடர் கொடுத்துச் சாப்பிடுவம். ஒரு மாற்றத்துக்கு நல்லது"**- என்று சொல்லிக் கொண்டே அவர் இரண்டாவது **"ரவுண்ட்"**- விஸ்கி எடுப்பதற்கு அடுக்குப் பார்க்கலானார். சங்கரப்பிள்ளை அண்ணன் வழக்கத்திற்கு மாறாக நடப்பது போல

விமலனுக்குத் தோன்றியது. அதைப் பற்றி யோசிப்பதற்கிடையில் அவனுடைய மனசிலே அப்பா பற்றிய வேறு நினைவுகள் மொய்த்துக் கொண்டன.

கொழும்பில் உத்தியோகம் பார்த்த காலங்களில் மாதமொரு முறையாவது வீட்டுக்கு வந்து விடுவான். அப்பா தன்னுடைய மகிழ்ச்சியை மற்றவர்கள் அறிந்து கொள்ளக் கூடாது என்கிற எச்சரிக்கையுடன், துள்ளல் நடை போடுவது அவனை மகிழ்விக்கும். இரண்டு நாட்கள் தான் ஊரிலே நிற்பான். புறப்படுவதற்கு முன்னர் அப்பா விமலனைத் தன்னுடைய காய்கறித் தோட்டத்துக்குள் அழைத்துச் செல்வார். திறமான காய்கறிகளை ஆய்ந்து ஒரு பையிலே போடுவார். மரவள்ளித் தோட்டத்தில் மரங்களைப் பிடுங்கி, ஒத்தவேர் கிழங்குகளை மட்டும் சீர்செய்து கொண்டே **"நல்ல மாக்கிழங்கு மகன். ஓர் அவியலுடன் அவிந்துவிடும்"**- என்று சொல்லும் பொழுதே விமலனுக்கு நாக்கில் நீர் ஊறும்.

எப்பொழுதும் உற்சாகமாக வயல், வரப்பு, கடை, கண்ணி என்று இருந்தவருக்கு எங்குமே சென்று, எதுவுமே செய்ய முடியாத நிலையை நாட்டுப் பிரச்சினைகள் ஏற்படுத்திய பொழுது, வீட்டிலே அடைபட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இளைய மகன் பிய்ச்சுக் கொண்டு வெளிநாடு போய்ச் சேர்ந்தான். அவருக்கு அது சந்தோசம் தந்தது. ஆனால், விமலன் வெளிநாடு செல்வதை அவர் விரும்பவில்லை.

நாட்டில் இனப்பிரச்சினை நாளாக நாளாக முற்றி, மோசமடையலாயிற்று. எத்தனையோ இழப்புக்களை அப்பா அடுக்கடுக்காகச் சந்திக்க நேர்ந்தது. இவற்றின் மத்தியிலே விமலன் வெளிநாடு செல்வதை அவர் தடுக்க விரும்பவில்லை. விருப்பம் வேறு. நிர்பந்தம் வேறு என்பதை அவர் அறிந்து கொண்டார். அரசு ஆதரவுடன் வளர்க்கப்பட்ட வன்முறைத் தொடரில் அப்பா மூத்த மகனையும், இரண்டாவது மகளையும் பறிகொடுத்தார். அந்த இரண்டு இழப்புகளும் அவரைப் பாதி மனிதனாக மாற்றியது.

நோர்வே நாட்டில் வாழ்ந்த விமலன், குடும்ப ஒன்றுகூடல் போல, தன் தம்பிக்குத் தமிழ்நாட்டில் கல்யாணம் நடாத்த ஏற்பாடு செய்தான். **"படித்த குடும்பம். பையன்கள் வெளிநாட்டிலே வேலை செய்கிறார்கள்.**

**கலை- இலக்கியங்களிலே மிகுந்த ஆர்வமுள்ளவர்கள். மகளுக்கு வெளிநாட்டிலே வரன் தேடுகிறார்கள். கல்யாணச் செலவுகளையும் தாராளமாக ஏற்கக் கூடிய வசதியும் உள்ளவர்கள்".-** என்கிற அறிமுகத்துடன், வந்த திருமணப் பேச்சு விமலனுக்குப் பிடித்ததாக இருந்தது. **"அண்ணா நீங்கள் பார்த்துச் செய்தால், எனக்கு எல்லாம் சம்மதம்"-** என்று தம்பி சொல்லி விட்டான்.

திருமணத்தின் போது எத்தனை எத்தனை எதிர்பார்ப்புக்களும் எத்தனை ஏமாற்றங்களும்! பணத்திற்காக மனிதனுடைய பண்புகள் இவ்வளவு அதல பாதாளத்துக்கு இறங்கி விடுமா? இதனைச் சம்பந்தி வீட்டார் **"சாமத்தியம்", "கெட்டித்தனம்"-** என்று பாராட்டி மகிழ்ந்தது அவன் மனசைக் கூனிக் குறுகச் செய்தது. ஏமாந்தது அல்ல. அந்த ஏமாற்றத்தின் எக்காளங்களால் அப்பா அடைந்த வேதனைகளைத் தான் விமலனால் ஜீரணிக்க முடியவுமில்லை. தாங்கிக் கொள்ள முடியவுமில்லை.

சென்னையிலே விமலனின் மனைவியும், குழந்தைகளும் வசித்து வந்த வீட்டின் மொட்டை மாடியிலே அப்பா விமலனைச் சந்தித்தார். அவனுடைய கைகளைப் பாசமுடன் கட்டிக் கொண்டார். அவர் குரல் அடைத்திருந்தது. நா தழுதழுத்தது. **"மகனே, நீ எவ்வளவு மனக் கஷ்டப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும். யாரை மகன் நோவது? சிறிசுகளை வாழவிட்ட பெரிய மனசு மகன் உன்னுடையது. எல்லாம் அவரவர் தலைவிதி.."-** என்றார். யார் யாரைத் தேற்றுவது? அப்பாவுக்கு எப்பவும் மிகப் பெரிய மனசு.

இன்னொரு சந்தர்ப்பத்திலே அப்பாவுக்கும் அவனுக்கும் இடையில் நடந்த சம்பாஷனை விமலனின் மனசிலே விஸ்வரூபம் எடுத்தது.

தமிழ்நாட்டுக்குச் செல்வதற்கு மட்டும் மிகப்பெரிய சிரமங்கள். அகதிநிலை பெற்றுவிட்டால், மற்ற நாடுகள் எல்லாவற்றுக்கும் போகலாம். சொந்த நாட்டினைத் தவிர! இதன் நியாய அநியாயங்களைப் பட்டிமன்றங்கள் வைத்துப் பேசுவதிலும், பயனில்லை. நியாயங்கள் எப்பொழுதும் தர்மங்களாய் அமைவதும் இல்லை. பெரும் பணம் செலவு செய்து, பல ஆபத்துக்களை ஏற்றுக் கொள்ளும் துணிச்சலுடன் தாய்நாடு சென்று, அப்பா முன் விமலன் தோன்றினான்.

**"எனக்குத் தெரியும். என்மகன் என்னைப் பார்க்க வருவார்"**- என்று ஓராயிரம் தடவைகள் சொல்லியும் அவர் மனசிலே புரண்டோடிய மகிழ்ச்சியை அவராலே வெளியிட முடியாது தவித்தார்.

பிரியும் பொழுது மட்டும் அப்பாவினால் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏதோ உள்ளுணர்வுகள் அவர் மனசிலே குமைந்து கொண்டிருக்க வேண்டும்.

**"மகன் திரும்பவும் போகப் போறியா? ஊரோட, குடும்பத்தோட இருந்திடன். நான் கண் மூடினால் கொள்ளி வைக்கவோ அல்லது ஒரு பிடி மண் போடவோ ஆர் இருக்கினம்?"**

**"அப்பா, உங்களுக்கு இப்ப என்ன வந்திட்டுது? இன்னும் இரண்டு, மூன்று வருஷம் உழைச்சுக் கொண்டு ஊரோட வந்திடுறன். பிறகு உங்கள் கண் பார்வை எட்டும் இடத்திலதான் வாழுவன்"**- என்று கண்ணீர் மல்க விமலன் கூறினான்.

அப்பாவின் நெடிய உருவம். விபூதிக்கு அழகு சேர்க்கும் அகன்ற நெற்றி. கலகலப்பான பேச்சு. உலகின் வஞ்சகமற்ற அன்பு முழுவதையும் குழைத்து வைத்தது போன்ற சிரிப்பு..

நாட்டு வைத்தியர், அப்பாவை, விமலன் நாடு திரும்பு மட்டும் காப்பாற்றி வைப்பாரா?

விஸ்கியின் அனுசரணையிலே சங்கரப்பிள்ளை அண்ணன் சமநிலை அடைந்தார்.

**"விமலன் நான் வெளியால போறதுக்கு முந்தி உனக்கு ஊரில இருந்து ஒரு 'ரெலிபோன் கோல்' வந்தது.. "**

**"என்னவாம் யார் பேசினது? அப்பாவுக்கு ஏதும்"**- என்று விமலன் பரபரத்தான்.

**"உன்ரை மைத்துனர்தான் எடுத்துப் பேசினவர். விஷயம் எதுவும் அவர் சொல்லேல்ல.. விமலன் எப்ப வருவான் எண்டு கேட்டவர்.."**

**"நீங்கள் என்ன சொன்னனீங்கள்"**

**"தம்பி இன்னும் ஒன்றரை மணி நேரத்திலை வீட்டிலை நிற்பான்**

**எண்டு சொன்னன்.. அப்ப அந்த நேரம் எடுக்கிறம். ஆளை வீட்டிலை நிக்கச் சொல்லுங்கள். அவசியம் பேச வேணும் எண்டு சொன்னார்.. இப்ப அவை எடுக்கக் கூடிய நேரந்தான்.**

**"நீங்கள் வேலைக்குப் போகேல்லையே.. கூடக் குறைய எடுக்கிறியள்.."**

**"நான் இண்டைக்கு வேலைக்குப் போகேல்லை. 'சிக்'– போட்டுத்தான் வெளியிலை போனனான்.**

விமலன் அவரை உற்றுப் பார்த்தான்.

**"மூப்பு, பிணி, சாக்காடு ஆரைத்தான் விட்டது".**

**"என்னண்ணே.. தத்துவம்.."**

**"தத்துவமோ? புத்தர் போதித்த போதனைகள்.. விஸ்கி உள்ளே போக ஞானம் புறப்படுகிறது"**

விமலன் ஏதோ சொல்ல வாய் உன்னிய பொழுது டெலிபோன் மணி சிணுசிணுத்தது. எடுத்துப் பேசினான்".

**"ஹல்லோ யாரு.."**

**"விமலனா நான் குணா பேசுறன். இன்று மாமா தவறிப் போயிட்டார். அதைச் சொல்லத்தான் அப்போது எடுத்தனான். நீ வீட்டிலை இல்லை".**

விமலனால் பேச முடியவில்லை. குரல் அடைத்துத் தொண்டையோடு நின்றது. விம்மல் மட்டும் வெளியில் வந்தது. கண்களில் நீர் சுரந்தது.

**"இஞ்ச விமலன், நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறன்"**

**"அத்தான் நான் ஊரில் இருந்தால், அப்பாவுக்கு என்னென்ன செய்வனோ, அத்தனையும் செய்யுங்கள்".** நா தழுதழுக்கப் பேசினான் விமலன்.

**"எங்களுக்கும் கடமைகள் இருக்கு. அவர் சொந்தப் பிள்ளை போலத்தான் நேசித்து நடத்தியவர். நாங்கள் எந்தக் குறையும் விடமாட்டோம். ஒண்டுக்கும் யோசிக்காதேயுங்கோ.. விஷயங்கள் முடிஞ்ச பிறகு விரிவாகப் பேசுறம்.."**

**“சரி.. அப்பா.. ஐயோ அப்பா.. எங்களை விட்டிட்டுப் போயிட்டிங்களா?”-** விமலன் வாய்விட்டுக் கத்தி விட்டான்.

**“நீ எதுக்கும் யோசிக்காத.. எனக்குத் தெரியும். உனக்கும், மாமாவுக்கும் இடையில் இருந்த அன்பு, பாசம் என்ன செய்வது, அவர் நல்லபடி போய்ச் சேர்ந்திட்டார். நீ போய் தனிமையில் இருந்து நல்லா அழுது தீர்த்திடு. சரி வைக்கிறன். நிறைய வேலை இருக்கு”.**

விமலனும் போனை வைத்தான்.

சங்கரப்பிள்ளை அண்ணன் ஏன் புத்தரின் தத்துவம் பேசினார் என்பது இப்போது விளங்கியது.

மற்றைய இரு நண்பர்களும் வீடு வந்து சேர்ந்தார்கள். சங்கரப்பிள்ளை அண்ணன் அறிவித்ததன் பேரிலே அவர்கள் லீவு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். சங்கரப்பிள்ளை அண்ணன் **“யாருக்கும் வேணுமோ”-** என்று கேட்பது போல **“அப்பர் ரென்”-** விஸ்கிப் போத்தலை மேசையிலே எடுத்து வைத்தார்.

விமலனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வர, தன் அறைக்குள் ஓடிச் சென்று, கதவைப் பூட்டிக் கொண்டான்.

கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு

சேயலாளராக **மூ.கோபாலரத்தினம்** நியமனம்!





–கவிதை–

# தொடுவானம் தூரமில்லை !!!

– ஆர்த்திகா சுவேந்திரன் –

எண்ணத்தில் உயர்விருந்தால்
ஏற்றத்தில் நினைவிருந்தால்
வானத்தின் எல்லை
முடிவிலி போலவே..!

எண்ணில் அடங்காது
வாழ்தலில் வெற்றியும்
வண்ணம் மங்காது
இலக்கில் உறுதியும்..

நினைப்பதற்குச் சாத்தியமானால்
நிதர்சனத்திற்கு சரித்திரமானால்
நின்றுலகை வாழ்விக்குமானால்
நிகழ்வதும் சாத்தியமே!

மனதின் அலைகள்
ஒன்றாய் குவிந்திடுகையில்
துணிவின் முகவரிகள்
வீரம் அழித்திடுகையில்..

தைரிய ரேகைகள்
தீரம் தந்திடுகையில்
தொடுவானம் தூரமில்லை!
பிரபஞ்சம் பாரமில்லை..!!!

# புதிய வரவு




நூல் :வளம்மிகு மண்டூர்
ஆசிரியர் :இ.பாக்கியராசா
சிரேஷ்ட ஊடகவியலாளர்
வெளியீடு: கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்

இன்று வரை கிழக்கில் வெளிவந்த தமிழ்ப் பிரதேசம் சார்ந்த வரலாற்று நூல்களில் இருந்து இந்நூல் இரு விதங்களில் வேறுபடுகின்றது. ஒன்று - மண்டூர் பிரதேச வரலாறு பற்றிய அறிமுகமும், ஆய்வும் சார்ந்த கருத்துக்கள் பலவும் இந்நூலாசிரியரது சுயதேடலையும், சுய அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறப்பெடுத்திருப்பது.

மற்றொன்று - இந்நூலின் அத்தியாயங்களின் அமைப்பு முறையும், மொழிநடையும் வாசக ஈர்ப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்திருப்பதாகும். இவ்விதத்தில் புதிய தலை முறை வாசகர்களையும் இந்நூல் கவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தொன்மைமிக்க மண்டூர் கிராமத்தின் அமைப்பு தொடக்கம் மட்டக்களப்பு வாவி வரை பல விடயங்களை ஆராய்ந்து புதுமையானதும், கனதியானதுமான நூலாக வளம்மிகு மண்டூர் விளங்குகிறது. மண்டூரைப் பற்றி எழுத எண்ணுபவர்களுக்கு ஆரம்பப் புள்ளியாக இந்த நூல் அமையும்.



# நீத்தார் நினைவு

## இலக்கியம்,கலை, அரசியலில் தடம் பதித்த அமரர் வேலுப்பிள்ளை தவராஜா!

- பழுவூரான் -

தமிழ்த் தேசிய பற்றாளரும், முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரும், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கச் செயலாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை வடக்குத் தலைவரும், ஓய்வு பெற்ற கணித ஆசிரியரும், எழுத்தாளரும், இலக்கிய வாதியும், ஊடகவியலாளருமான அமரர் வேலுப்பிள்ளை தவராஜா தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை நல்கியுள்ளார் எனக் கூறினால் அது மிகையாகாது.

மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் தொடக்கம் தமிழ்மொழி அமுலாக்கலின் அவசியத்தினைத் தொடர்ச்சியாக வலியுத்தி வந்த அவர், மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தூய தமிழுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதற்குரிய ஆக்க பூர்வமான நடவடிக்கையினையும் முன்னெடுத்திருந்தார்.

அத்தோடு மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கலை மற்றும் கலாசார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் மாநகர சபையினால் பௌர்ணமி கலை விழாவை மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்படும் மேடையில் நடாத்தி, தமிழின் சிறப்புக்குப் பெருமை சேர்த்ததை மறந்து விட முடியாது.

இவ்வாறாக பாரதி கூறிய **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது ஒன்றும் காணோம்"**- எனும் கருத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றிய அமரர் வேலுப்பிள்ளை தவராஜாவுக்குத் **"தென்றல்"**- தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# வாசகர் நெஞ்சம்

கிழக்கிலங்கையிலிருந்து வரும் **"தென்றல்"-** சுகந்தம் - 51 மேற்கிற்கும் வந்தது. இலட்சியம் கலந்து இலக்கிய மணம் கமழச் செய்கிறது. சுவையூட்டும் கவிதைகள், சுவாரஸ்யமான படைப்புக்கள், அறிவூட்டும் தகவல்கள் என அத்தனை அம்சங்களும் அபாரம்! நன்றிகள்.

கவிதாயினி சுஜந்தினி யுவராஜாவின் அறிமுகம், அவர்தம் அழுத்தமான செயற்பாடுகள், படைப்பாக்கங்கள் என்பன அவர் குறித்தான முழுமையான தேடலாக அமைகிறது. இத்தேடல் ஊடாகப் பல அரிய தகவல்களை அறிய முடிந்தது.


**"புதிதாய்ப் பிறந்தாள்"-** சிறுகதையும் , **"நாகரீக கலாசாரம்"-** கவிதையும் கலாசாரச் சீரழிவினை எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் கவிதாயினி இராணி பௌசியா எழுதிய **"ஆட்டங்கள் அடங்கியதோ.."-** என்ற கவிதை அருமையிலும் அருமை. தற்போது எம்மை ஆட்டிப் படைக்கும் கொரோனாவின் கோரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் எமது உறவுகளின் அவலத்தை வெளிக்காட்டியிருக்கிறார். கவிதாயினி மிக நீண்ட காலமாகவே தேசிய பத்திரிகைகள், இலக்கிய இதழ்களில் எழுதி வருபவர்.

இவற்றோடு இவ்விதழ்களில் வெளிவந்துள்ள கட்டுரைகளான பேராசிரியர் சபா.ஜெயராசா எழுதிய **"சிற்றிதழ்கள் மாறுபட்ட வாசிப்பு"-** எனும் கட்டுரை சிற்றிதழ்களின் வரவில் எதிர் நோக்கப்படும் சவால் களைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறாக சுகந்தம்- 51 இன் வரவு எமக்கு தந்த வரமே! **"தென்றலே.. நீ எத்தடை வரினும் அத் தடைகளையெல்லாம் முறியடித்து வா.."-** என வேண்டி- வாழ்த்தி நிற்கிறேன்.

**என்.இரகுநாதன்,**
வெள்ளவத்தை,கொழும்பு.



காந்தள் அச்சகம்
புதுக்குடியிருப்பு
0652226722 /754300273